உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்


மலர்-5 இதழ்-138

மே 16-31, 2022


விருப்ப சந்தா இதழ்



## உலகம் எப்போது அழியும்?

# விடை சொல்லும் ஸ்ரீ ரங்கம் கோபுரம்






www.aanmeegamalar.com

# திருவண்ணாமலை கிரிவலத்திற்கு முன் வணங்க வேண்டிய மூன்று கோவில்கள்



www.aanmeegamalar.com

திருவண்ணாமலையில் கிரிவலம் தொடங்குவதற்கு முன்பு மூன்று கோயில்களில் உள்ள தெய்வத்திடம் அனுமதி பெற்ற பிறகே கிரிவலத்தை தொடங்க வேண்டும் என்பது நியதி.

திருவண்ணாமலையில் முதன் முதலில் கிரிவலம் சென்றது பார்வதிதேவி ஆவார்.

## 1. பூத நாராயணர் கோயில்

பார்வதி தேவி சிவபெருமானிடம் இடதுபாகத்தை பெருவதர்க்கு பூத நாராயணர் கோயிலில் கற்பூரம் ஏற்றி வழிபட்ட பிறகுதான் கிரிவலத்தை தொடங்கினார்.

பூத நாராயணர்தான் திருவண்ணாமலையின் காவல் தெய்வம். அவரை வணங்கிவிட்டுப் புறப்பட்டால் எந்தவித இடையூறும் இல்லாமல் கிரிவலத்தை முடிக்க முடியும் என்பது நம்பிக்கை.

## 2. இரட்டைப் பிள்ளையார் கோயில்.

செவ்வாய் தோசம், ராகு தோசம், பிரம்மஹத்தி தோசம் உள்ளவர்கள் அரசமர இலையில் தீபம் இட்டு வழிபட வேண்டும்.

பார்வதி தேவி பிரம்மஹத்தி தோசம் நீங்குவதற்கு முதல் கடவுள் இரட்டை பிள்ளையார் கோயிலில் வழிபட்ட பிறகு கிரிவலம் வர தொடங்கினர்.

## 3. தேரடி முனீஸ்வரர் திருக்கோயில்

மூன்றாவதாக தேரடி முனீஸ்வரர் கோவிலில் வழிபட வேண்டும். அதன் பிறகு ஆலயம் சென்று அண்ணாமலையாரையும், உண்ணாமுலை அம்பிகையையும் தரிசிக்க வேண்டும். பிறகு கோயில் ராஜ கோபுரத்தை வணங்கிவிட்டு மலையை வலம் வரத் தொடங்க வேண்டும்.




# சிவனுக்குள் முருகன் சன்னதி மகனுக்காக முருகன் கோவிலாக மாறிய

# திருப்பரங்குன்றம்

முருகப்பெருமானின் ஆறுபடை வீடு என்பதை அனைவருக்கும் தெரிந்தது, ஆனால் அந்த ஆறு படை வீடுகளில் சற்று வித்தியாசமான படை வீடு என்றால் அது திருப்பரங்குன்றம்தான்.

இத்தலம் முருகனின் வெற்றி ஸ்தலமாக போற்றப்படுகிறது. இத்தலத்தில் பல்வேறு சிறப்புகள் உள்ளன.

திருப்பரங்குன்றம் முருகன் கோவில் சிவனுக்குள் அடக்கமாகியுள்ளது சிறப்பு.

இத்தலம் அமைந்துள்ளமலை சிவ அம்சமாக திகழுவதால், முருகன் வீற்றிருக்கும் சன்னதிக்கு மேல் விமானம் கிடையாது.

முருகன் சூரனை அழித்து வெற்றியுடன் இத்தலத்தில் அமர்ந்ததால் வேலுக்கும் முருகனுக்கும் முக்கியத்துவம் தரும் வகையில், சிவ சன்னதியாக திகழ்ந்த கோவிலில் முருகனுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு நாளடைவில் முருகன் கோவிலாக வழிபடப்பட்டது.

ஆறுபடை வீடுகளில் மற்ற ஐந்து படை வீடுகளிலும் முருகன் நின்ற கோலத்தில் காட்சியளிப்பார், ஆனால் திருப்பரங்குன்றத்தில் மட்டுமே அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார்.

சிவன் கோவிலாக திருப்பரங்குன்றம் திகழ்ந்தாலும் முருகனுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. ஆரம்பகாலத்தில் இத்தலத்தில் சிவனே பிரதான தெய்வமாக இருந்தார், முருகப்பெருமான் தென் பரங்குன்றம் குடவரையில் மட்டுமே காட்சி தந்தார்.

திருப்பரங்குன்றம் அறுபடை வீடுகளில் முதல் படை வீடு ஆகும். 247 தேவாரத் திருத்தலங்களில் ஒன்று ஆகும். நக்கீரர், அருணகிரி நாதர், பாம்பன் சுவாமிகள், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் இத்தலத்தைப் பற்றி பாடி உள்ளனர்.

இங்கு சத்தியகிரீஸ்வரர் (சிவன்), பவளக்கனி வாய்ப் பெருமாள், கற்பகவிநாயகர், சுப்பிரமணியர், துர்க்கையம்மன் என பஞ்ச தெய்வங்களும் மூலஸ்தானத்தை ஒட்டி ஒரே குடவரையில் இருப்பது வேறு எந்த முருகன் திருக்கோவில்களிலும் காண இயலாத காட்சி ஆகும்.

திருப்பரங்குன்றத்தில் துர்க்கையம்மன் கொடி மரமும், ராஜகோபுரத்துடன் இருக்கிறாள்.

துர்க்கையின் சன்னதி எதிரிலேயே கொடிமரமும், கோபுரமும் இருந்து தலத்தின் சிறப்பை அதிகரிக்கின்றன. கருவறையில் துர்க்கைக்கு இடதுபுறம் கற்பக விநாயகர் அருளுகிறார்.

கையில் கரும்பு ஏந்திக்கொண்டு தாமரை மலர் மீது அமர்ந்து வித்தியாசமான கோலத்தில் காட்சி தருகிறார். இவரைச் சுற்றி பல ரிஷிகள் வணங்கியபடி இருக்கின்றனர். இதுவும் ஒரு சிறப்பு ஆகும்.

சிவபெருமானே மலை வடிவில் அருளுகிறார். திருப்பரங்குன்றம் கோயிலில் மகாமண்டபத்தின் முகப்பில் நந்திகேஸ்வரர், அவரது மனைவி காலகண்டியுடன் இருக்கிறார்.

திருப்பரங்குன்றத்தில் பிரகாரம் கிடையாது. சிவனே மலை வடிவமாக அருளுவதாலும், கோயில் குடவறையாக இருப்பதாலும் பிரகாரம் இல்லை. மலையைச் சுற்றி கிரிவலம் மட்டுமே செல்ல முடியும். அம்பாள் ஆவுடைநாயகி தனிச் சன்னதியில் தெற்கு பார்த்தபடி இருக்கிறார்.

இங்கு தான் சூரசம்ஹரத்தின் போது சுப்பிரமணிய சுவாமி வேல் வாங்குவார். இங்கு தெய்வானையை மணம் முடித்த கோலத்தில் அருளுகிறார். அருகில் நாரதர், இந்திரன் ஆகியோர் உள்ளனர்.

பிரம்மா, நின்றகோலத்தில் வீணையில்லாத சரஸ்வதி, சாவித்திரி ஆகியோரும் உள்ளனர். சூரியன், சந்திரன், கீழே முருகனின் வாகனமான மயில் மற்றும் ஆடு உள்ளது. இது மற்ற தலங்களில் காணக் கிடைக்காத அபூர்வக் காட்சி ஆகும். சுப்பிரமணியரின் தரிசனம்காண்பதற்காக, தேவர்கள் மற்றும் மகரிஷிகள் வெண்ணிற மயில் வடிவில் இங்கு வசிப்பதாக ஐதீகம்.

சுப்பிரமணியர் கோயிலுக்குஎதிரே ஆதிசொக்கநாதராக அருளுகிறார். இங்கு இவர்தான் பிரதான மூர்த்தி ஆவார். விழாக்காலங்களில் இவருக்குதான் கொடி ஏற்றப் படுகிறது. இருப்பினும் முருகனே சிவபெருமானின் வடிவம் என்பதால் அவரே வீதி உலா வருகிறார் என்பது இன்னொரு சிறப்பு ஆகும்.

மகாவிஷ்ணுவின் வாகனமாக கருடாழ்வார், அவருக்கு எதிரே வணங்கியபடி இருப்பார். ஆனால், இக்கோயிலில் மகாவிஷ்ணுவிற்கு எதிரே சிவன் இருப்பதால், கருடாழ்வார் சன்னதி இல்லை. அதற்குப் பதிலாக கருடாழ்வார், சண்முகர் மண்டபத்திலுள்ள கார்த்திகை முருகனுக்கு அருகில் வடக்கு நோக்கி இருக்கிறார். இங்கு சிவபெருமானுக்கு எதிரே பவளக்கனிவாய்ப் பெருமாள் மகாலக்ஷ்மியுடன் அமர்ந்த கோலத்தில் இருக்கிறார். சிவனுக்கு எதிரே நந்தி இல்லை, பெருமாளுக்கு எதிரே கரு டன் இல்லை. மாறாக சிவனும் பெருமாளும் எதிர் எதிரே உள்ளனர். ஆகவே இதனை மால்விடை கோவில் என்று அழைப்பது இன்னொரு சிறப்பு.

இந்த பவளக்கனிவாய்ப் பெருமாள்தான் மதுரையில் நடைபெறும் மீனாக்ஷி திருக்கல்யாணம் அன்று சொக்கருக்கு தாரை வார்த்து கொடுக்கப் போவார்.

ஆரம்ப காலத்தில், திருப்பரங்குன்றம் கோயிலுக்கு பின்புறத்திலுள்ள தென்பரங்குன்றம் குடவறைக் கோயிலே பிரதானமாக இருந்திருக்கிறது. இக்கோயில் சேதமடைந்ததால், கோயிலை மறுபக்கத்திற்கு மாற்றி முருகப் பெருமானை வடக்கு திசை நோக்கி திருப்பி அமைத்திருக்கின்றனர். எனவே “திருப்பிய பரங்குன்றம்” என்றழைக்கப்பட்ட இவ்வூர் “திருப்பரங்குன்றம்” என்று மருவியது.

அருணகிரியார் தன் பாடல் களில் தென்பரன் குன்றுரை பெருமாளே என்று பாடுகிறார். இப்போதும் மூலவர் சிவன்தான். இவரை “சத்தியகிரீஸ்வரர்” என்று அழைக்கின்றனர்.

முருகன், தெய்வானையை திருமணம் செய்த தலம் என்பதால், முருகனுக்குமுக்கியத்துவம் தரப்பட்டு, சுப்பிரமணிய சுவாமி கோயிலாக மாறி விட்டது. ஆறு படை வீடுகளில் இங்கு மட்டுமே முருகனுக்கு அபிஷேகம் கிடை யாது. புனுகு மட்டும் சாற்றப்படுகிறது.

முருகன் குடைவரை மூர்த்தியாக இருப்பதால் இந்த ஏற்பாடு. புரட்டாசி மாதம் கடைசி வெள்ளிக்கிழமையன்று முருகனிடம் உள்ள வேல், மலையிலுள்ள காசிவிஸ்வநாதர் கோயிலுக்கு கொண்டு செல்லப்படும். அங்கு அபிஷேகம் நடக்கும். அறுபடை வீடுகளில் வேலுக்கு அபிஷேகம் நடக்கும் கோயில் இங்கு மட்டுமே ஆகும். வேலுக்கு முக்கியத்துவம் ஏன் என்றால் சூரனை ஆட்கொண்டு வெற்றி வேலுடன் முருகன் இங்கு வந்து அமர்ந்ததே ஆகும்.



கீதா–ராஜன்

www.aanmeegamalar.com

சிவன், விநாயகர், முருகன் ஆகிய மூவருக்குமான வாகனங்கள் கொடிமரத்திற்கு அருகில் அமைந்துள்ளன. இங்குள்ள தெட்சிணாமூர்த்தி, இடது கையை தன் காலுக்கு கீழே உள்ள நாகத்தின் தலை மீது வைத்துள்ளபடி இருப்பது மற்றுமோர் சிறப்பு ஆகும்.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203




# 3 வகையான மனிதர்கள்

ஒருமுறை மகாவிஷ்ணு கருடனுடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது, திருமால் கருடனை பார்த்து கேட்டார்

"இந்த உலகில் எத்தனை வகையான மனிதர்கள் உள்ளனர் கருடா...?" என்று.

அதற்கு சற்றும் யோசிக்காமல் கருடன் சொன் னார் "மூன்று வகையான மனிதர்கள் உள்ளனர் மகா பிரபு" என்றார்.

மகாவிஷ்ணு "என்ன மூன்று விதமான மனிதர் களா? இத்தனை கோடி மக்களில் மூன்று விதமான மக்கள் தானா உள்ளார்கள்" என்று கேட்டார்.

"மகா பிரபு ஒன்றும் அறியாதவர் போல நீங்கள் கேட்பது ஏன்...? என்னை வைத்து என்ன நாட கமோ தெரியவில்லை...? ஆனால் தங்கள் அரு ளால் நானறிந்தவரை மூன்று விதமான மக்கள் தான் உள்ளனர்" என்று கூறினார் கருடன்.

"அப்படியானால் அவர்களைக் கூறு பார்க்கலாம்" என்றார் மகாவிஷ்ணு.

"கூறுகிறேன் பிரபோ...

- முதல் வகையினர்: பறவையும் அதன் குஞ்சு களும் போல் உள்ளனர்.
- இரண்டாம் வகையினர்: பசுவும் அதன் கன் றும் போல் உள்ளனர்.
- மூன்றாம் வகையினர்: கணவனும் மனைவி யும் போல் உள்ளனர் அவ்வளவு தான் மகா பிரபு" என்றான்.

மகாவிஷ்ணு சும்மா விடுவாரா!!! "சற்று விளக்கமாக புரியும்படி சொல்" என்றார்.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

### 1 முதல் வகையினர்:

"முதலில் பறவையும் அதன் குஞ்சுகளும் எப்படி யென்றால்...

பறவை முட்டையிட்டு குஞ்சு பொரித்துவிட்டு அதன் குஞ்சுகளுக்காக உணவு தேடிப் போகிறது, அது சென்று வருவதற்குள் பாம்புகளும் மற்ற



பறவைகளும் தனது உணவாக அந்த குஞ்சு களையே உண்டு விடு கிறது, காணாமல் போன குஞ்சுகளுக்காக பறவை பெரிதாக கவலை யெல் லாம் படுவதில்லை, இருப்பதற்கு உணவு ஊட்டும்.




அதுபோல் குஞ்சுக ளுக்கும் தன் வாயில் ஊட்டப்படும் உணவு தான் தெரியும், தன் தாய் யார், தகப்பன் யார் போனது வருமா வராதா எதுவும் தெரியாது, நாளானவுடன் பறக்க முயற்சி செய்து கீழே விழுந்து மடியும், மீந்து போன பறவை வாழும் வரை வாழும், அவ்வளவு தான்...

இந்த வகை மனிதர்கள் இது போலத்தான் கிடைத்த வேலையை செய்வார்கள், கிடைத்ததை உண்பார்கள், இல்லையா பட்டினி கிடப்பார்கள்.

வாழ்க்கை சக்கரத்தில் அகப்பட்டு, புற வாழ்க் கைக்காக அலைந்து, திரிந்து, கடைசியில் மரணிப்பார்கள். அவர்களுக்கு பகவானே உங் களை நினைக்க கூட தெரியாது. வாழ்வார்கள், உயிரோடு வாழும் வரை அவ்வளவு தான்.

## 2. இரண்டாம் வகையினர்:

இரண்டாவது பசுவும் கன்றும் எப்படியென்றால்...

பசு ஓரிடத்தில் கட்டப்பட்டிருக்கும், அதன் கன்று ஓரிடத்தில் கட்டப்பட்டிருக்கும். கன்று பசுவைப் பார்த்து சப்தமிடும், பசு கன்றினைப் பார்த்து சப்தமிடும், கன்றுவுக்கு தெரியும், தாயின் மடியிலிருக்கும் பால் அருந்தினால் தான் பசி அடங்கும் என்று. ஆனாலும் அதன் கழுத்தில் கட்டப்பட்டுள்ள ஒரு முழம் கயிறு அதனை அதன் தாயிடம் செல்ல விடாமல் தடுக்கிறது, கன்று இழுத்து இழுத்துப் பார்த்து ஏங்கித் தவிக்கும்.

அது போல ஒரு சாராருக்கு உங்களை தெரியும் வரும் வழியும் தெரியும், உங்களால் தான் மனித வாழ்வே நிரந்திர சுகம் பெறும் என்பதும் தெரியும்,

ஆனாலும் உங்களோடு வர முடியாமல் பாசம் என்ற ஒரு முழ கயிற்றில் மாட்டிக்கொண்டு பகவானே உங்களை பார்த்து, பார்த்து ஏங்கி தவிக்கும்.

## 3. மூன்றாம் வகையினர்:

மூன்றாவது கணவனும் மனைவியும் எப்படி யென்றால்...

முன் பின் அறியாத ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்ட கணவன், அவளிடம் முகம் கொடுத்து கூட பேசமாட்டான், அவளைப் பிடிக்காமல் ஒதுங்கி ஒதுங்கி போவான், ஆனால் அவளோ, அவனைப் பார்த்த நாளிலிருந்து அவன் நினைவால் இருந்து அவனுக்கு பிடித்த வகையில் உடையுடுத்தி, அவனுக்கு பிடித்த வகையில் உணவு சமைத்து, அவனுக்கு பிடித்த வகையில் தன்னை அலங்கரித்து கொண்டு, தான் அவனுக்காகவே பிறந்தவள் என்பதை அவ னுக்கு உணர்த்தி அவனை தன் பக்கம் ஈர்ப்பாள்.

முதலில் வெறுத்த அவன் ஓராண்டுக்குள் அவள் அன்பில் கரைந்து அவள் செல்லும் இட மெல்லாம் செல்கிறான், அவளை பிரிய மறுக் கிறான்.

அது போல ஒரு சாரார் இறைவா உங்களை கண்டதில்லை.

ஒரு நாள் யாராவது ஒருவர் மூலமாக உணர்த் தப்பட்டு உங்களை காண முற்படும் வேளையில், உங்களுக்கு பிடித்தப்படி தங்களை மாற்றிக் கொள்கிறார்கள்.

முதலில் சோதிக்கும் நீங்கள் எங்களின் தூய்மையான அன்பில் கரைந்து எங்களோடு வருகிறீர்கள் எங்களோடு உறவாடுகிறீர்கள், முடிவில் உங்களோடு எங்களை ஐக்கியப்பட அனுமதிக்கிறீர்கள். நாங்களும் ஆனந்தமாக உங்களோடு கலந்து விடுகிறோம்.

ஆக மூன்று விதமான மனிதர்கள்தான் உலகில் உள்ளனர்" என்றார் கருடன்.

மனம் மகிழ்ந்த மகாவிஷ்ணு கருடனை வாழ்த்தி தன்னுள் ஏற்றுக் கொண்டார்...






# வியாபாரம், தொழில், சிறப்படையவும் வேண்டுதலை நிறைவேற்றிவைக்கு

# முசிறி ஸ்ரீ லட்சுமி நாராயணப் பெருமாள்

அருள்மிகு ஸ்ரீ லட்சுமி நாராயணப் பெருமாள் திருக்கோவில் அக்ரஹாரம் முசிறி திருச்சி மாவட்டம்.

வரலாற்று சிறப்புமிக்க திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருச்சி நாமக்கல் நெடுஞ் சாலையில் திருச்சியிலிருந்து சுமார் 43 கிலோ மீட்டர் தொலைவில் முசுகுந்தபுரி என்று புராணங்களில் அழைக்கப்பட்டு இன்று முசிரி என்று அழைக்கப்படும் பசுமை நிறைந்த ஊரில் அக்ரஹாரத்தில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு முசுகுந்த சோழன் இருந்த காலத்தில் கட்டப்பட்ட கோயில்.

இந்த தளத்தில் பெருமாள் ஸ்ரீ லெட்சுமி தேவியை இடது தொடையில் அமர்த்திக் கொண்டு இடது கையால் அணைத்தபடி வலது கையால் தம்மை நாடி வரும் பக்தர்களுக்கு வேண்டிய வரம் அருளும் படி அபய ஹஸ்தம் கொண்டு அருள் புரிகிறார்.

இத்திருக்கோயில் சுக்ர ஸ்தலமாக விளங்குகிறது திருமணத்தடை குழந்தைப் பேறு போன்றவைகளுக்காக, இத்தலத்தில் பரிகாரம் செய்து, பக்தர்கள் பலன் பெறுகிறார்கள்.

இத்தலத்தின் சிறப்பு பற்றி கூறும்போது, லெட்சுமி தேவியுடன் இருக்கும் பெருமாளை ஏழு வாரங்கள் 12 முறை சுற்றி வந்தால் நினைத்த காரியம் உடனே நிறைவேறும் என்று கூறுகின்றனர்.

இதை மெய்ப்பிக்கும் வகையில், நினைத்த காரியம் நிறைவேறிய பலர் இத்திருத்தலத்தில் அவர்களின் வேண்டுதல்கள் நிறைவடைந்தவுடன், வேண்டிய பரிகாரத்தை இத்தலத்தில் செய்கின்றனர்.

இத்திருத்தலத்தில் கருடன் மற்றும் ஆஞ்சநேயர் எதிரெதிர் நின்று சேவை சாதிப்பது மற்றொரு சிறப்பாகும். சக்கரத்தாழ்வார் மற்றும் யோகநரசிம்மர் விக்கிரகம் பிரதிஷ்டை ஸ்ரீரங்கம் பண்டரிபுரம் ஆண்டவன் சுவாமிகளால் செய்யப்பட்டது.

தொழில் புரிவோர் மற்றும் வியாபாரம் செய்பவர்கள், வியாபாரத்தடை கடன் தொல்லை தொழில் தடை எதிரிகளால் ஏற்படும் பயம் வேலையின்மை போன்றவற்றை நீக்கி வாழ்வில் வளம் சேர்க்கிறார் இத்தலப் பெருமாள்.

இந்த திருத்தலத்தில் பிரதி மாதம் அமாவாசை அன்று மூலவர் திருமஞ்சனமும் திருவோணம் நட்சத்திரத்தில் எல்லாத் தடைகளையும் உடைக்கும் ஸ்ரீசுதர்சன ஹோமம் நடைபெறுகிறது.

சக்கரத்தாழ்வாருக்கு சித்திரை நட்சத்திரத்தன்றும் சுவாதி நட்சத்திரம் மற்றும் பிரதோஷ காலங்களில் ஸ்ரீ நரசிம்ம சுவாமிக்கு திருமஞ்சனம் நடைபெறுகிறது.

வருடாந்திர திருவிழாவாக ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி புரட்டாசி மாதம் நவராத்திரி பத்து நாள் உற்சவம் பங்குனி மாதம் பிரம்மோற்சவம் பத்து நாட்கள் இங்கு விமரிசையாக நடைபெறும்.

நடை திறந்திருக்கும் நேரம் காலை 9 மணி முதல் 12 மணி வரை மாலை 6 மணி முதல் 8 மணி வரை சனிக்கிழமைகளில் காலை 7 முதல் 12 30 வரையிலும் மாலை 6 மணி முதல் 8:30 மணி வரையிலும் திறந்திருக்கும்.

மேலும் இத்தலத்தைப் பற்றிய விபரங்கள் அறிய பாலாஜி பட்டர், செல் நம்பர் 8903554426


பாலாஜி பட்டர்



உலகம் எப்போது அழியும்?

# விடை சொல்லும் ஸ்ரீ ரங்கம் கோபுரம்




ஏழு அதிசயங்கள் கொண்ட ஸ்ரீரங்கநாத பெருமாள் எல்லாமே 7 என்ற பெருமையைக் கொண்ட தலம் ஸ்ரீ ரங்கம். 7 பிராகாரம், 7 மதில்கள்,

ஸ்ரீதேவி, பூதேவி, துலுக்க நாச்சியார், சேரகுலவல்லி நாச்சியார், கமலவல்லி நாச்சியார், கோதை நாச்சியார், ரங்கநாச்சியார் என ஏழு தாயார்கள்,

7 உற்சவம், 7 திருவடி சேவை, 7 கண்டுகளிக்கும் சேவை என ஏகப்பட்ட 7 அதிசயங்கள் ஸ்ரீரங்கத்தில் உள்ளன.

ஆன்மிகமலர்.காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

அதில் முக்கியமான ஏழு அதிசயங்கள் இன்றும் ஆச்சர்யத்தைக் கொடுப்பவை. அவை

1. வளரும் நெற்குதிர்கள், 2. அசையும் கொடிமரம், 3. ஸ்ரீராமானுஜரின் திருமேனி, 4. தேயும் அரங்கனின் செருப்புகள், 5. அரங்கனின் ஜொலிக்கும் திருக்கண்கள், 6. ஐந்து குழி மூன்று வாசல் 7. ரங்க விமானம்

## வளரும் நெற்குதிர்கள்

20 அடி விட்டமும் 30 அடி உயரமும் கொண்ட 5 பிரம்மாண்ட நெற்குதிர்கள் சக்கரத்தாழ்வார் சந்நிதிக்கு அருகே அமைந்துள்ளன.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உருவான

இந்த நெல் சேமிப்பு கிடங்கிகள் வட்டவடிவமாக அமைந்தவை. மொத்தமாக 1500 டன் அளவுக்கு இந்த கிடங்கியில் நெல் சேமிக்க முடியுமாம்.

எந்தக் காலத்திலும் இந்த குதிர்களில் நெல் இல்லாமல் போனதே இல்லை என்ற பெருமையைக் கொண்டதாம் இவை. அதுபோல எத்தனை நெல் கொட்டினாலும் விரி வடைந்து ஏற்றுக்கொள்ளும் தன்மை கொண்டது என்றும் அதிசயமாக இந்தக் குதிர்களைச் சொல்கிறார்கள்.

## அசையும் கொடிமரம்

ரெங்கவிலாஸ் மண்டபத்தில் உள்ள கல்கொடி மரத்தின் முன்பு விழுந்து வணங்கி உயர்ந்து நோக்கினால் அசையும் தோற்றத்தில் நம்மை ஆச் சரியப்படுத்தும் என்கிறார்கள். அப்படி அசையும் விதமாக காட்சி அளித்தால் நம் வேண்டுதல்கள் நிறைவேறும் என்பது நம் பிக்கை.

## ஸ்ரீராமாநுஜரின் திருமேனி

ஸ்ரீராமாநுஜர் தமது 120வது வயதில் (கி.பி. 1137), தாம் பிறந்த அதே பிங்கள ஆண்டு மாசி மாதம் வளர்பிறை தசமி திதியில், சனிக்கிழமை நண்பகலில், ஜீயர் மடத்தில் பகவத் சாயுஜ்யம் அடைந்தார். இவரது திருமேனி அரங்கனுடைய வசந்த மண்டபத்தில் அப்படியே பிரதிஷ்டை செய் யப்பட்டது. 884 ஆண்டுகள் கடந்தும் ஸ்ரீராமாநுஜ ரின் திருமேனி அப்படியே காட்சி தருவது திருவரங்கத்து அதிசயங்களில் ஒன்று.

தானான திருமேனியில் இன்றும் தலைமுடி, கைநகம் போன்றவை இருப்பதையும் வளர்ந்திருப் பதையும் காணலாம்.

## தேயும் காலணிகள்

திருவரங்கத்தில் பள்ளி கொண்டுள்ள,பெருமாள் அணிந்து கொண்டிருக்கும் காலணிகள் தேய் மானத்திற்கு பின் ஸ்ரீரங்கம் திருக்கொட்டாரம் எனும் இடத்தில் தூணில் மாட்டி வைக்கப்பட்டிருப்பதை அங்கு சென்றவர்கள் கண்டிருக்கலாம்.

இந்த காலணிகளை செய்வதற்காக காலம் காலமாக தனித்த தொண்டர்கள் இருக்கிறார்கள்.

இரண்டு செருப்பையும் இரண்டு ஊர்களில் தனித்தனியாக செய்வார்கள்.

இரண்டுமே ஒன்றுபோலவே இருக்கும் என்பதும் அதிசயம்.

ஆறு மாதங்களுக்கு ஒருமுறை இந்த செருப்புகளை அரங்கனின் திருப்பாதத்தில் இருந்து கழற்றுவார்கள்.

அவை பயன்படுத்தப்பட்டவைபோல தேய்மானம் கொண்டிருக்கும் என்பதும் அதிசயம்.




## ஸ்ரீரங்கனின் ஜொலிக்கும் திருக்கண்கள்

ரங்கனின் திருக்கண்கள் விலை மதிப்பில்லாத வைரங்களால் உருவானவை என்றும், அவை விபீஷணனால் வழங்கப்பட்டவை என்றும் சொல் லப்படுகிறது. ஆனால் அவை அயலார் காலத்தில் திருடு போய்விட்டன என்றும், இப்போது அவை ரங்கனின் திருக்கண்களில் இல்லை என்றும் சொல்கிறார்கள்

## ஐந்து குழி மூன்று வாசல்

ஸ்ரீரங்கம் கோயிலின் தாயார் சந்நிதிக்கு வெளியே இருக்கும், ஐந்து குழி மூன்று வாசல் அற்புதமானது.

இங்குள்ள ஐந்து குழிகள் வழியே, ஐந்து விரல்களை வைத்து தெற்கு பக்கம் பார்த்தால் பரமபத வாசல் தெரியும்.

இப்படித்தான் தாயார் பெருமாளை சேவிக்கிறார் என்பது ஐதீகம்.

அர்த்த பஞ்சக ஞானத்தைக் குறிப்பதே ஐந்து குழி என்றும் மூன்று வாசல் என்பது பிரம்மத்தின் வழி என்பதும் பெரியோர்கள் வாக்கு.

## உலகம் அழிவிற்கு விடை சொல்லும் ஸ்ரீரங்கம் கோபுரம்

ஸ்ரீரங்கத்தின் பெருமைகளில் ஒன்றான ரங்க விமானம் சுயம்புவாக உருவானது.

இந்த விமானத்தைச் சுற்றி 24 கி.மீ. தூரத் துக்குள் எங்கிருந்து வழிபட்டாலும் முக்தி நிச்சயம் என்கிறது ஸ்ரீரங்கத் தலவரலாறு.

இந்த விமானம் பொன்னால் வேயப்பட்டு ஓம் என்கிற பிரணவ வடிவில் எழுந்தருளி உள்ளது.

இந்த தங்க விமானத்தில் உள்ள பரவாசு தேவர், கையில் அமுதக் கிண்ணத்துடன் காட்சி யளிக்கிறார்.

அந்த அமுதக் கிண்ணம் மெல்ல அவர் வாயை நோக்கி நகர்ந்து போவதாகவும், அது வாயருகில் சென்று சேர்க்கையில் இந்த உலகம் அழியும் என்றும் ஒரு நம்பிக்கை உள்ளது.

# தெரியாத, புரியாத, ஆன்மிகத் தகவல்களை

**எளிமையாக தொகுத்து பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில் நமது இதழில் வெளியிட்டு வருகிறோம்...**

eBook DOWNLOAD

free

இதுவரை வெளிவந்த

**130** க்கும் மேற்பட்ட இதழ்களை

**aanmeegamalar.com**

**இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.**




# குளிரும் கொடைக்கானலில்

## பிரசித்திபெற்ற

# மூன்று முருகன் கோவில்கள்

கொடைக்கானல் என்றாலே நம் நினைவுக்கு வருவது இன்பச் சுற்றுலா தான். அந்தளவுக்கு குளிர் மற்றும் இயற்கை எழில் கொஞ்சும் மலைகளின் இளவரசி கொடைக்கானல்.

கொடைக்கானல் என்றால் ‘காடுகளின்பரிசு’ என்று பொருள். மரகத பச்சை காடுகள், பசு மையான நீர்வீழ்ச்சிகள், என அனைத்து இயற்கை ஆர்வலர்களுக்கும் இந்த இடம் ஒரு ரத்தினமாகும். மலைவாசஸ்தலங்களின் இள வரசி என்றும் அழைக்கப்படும் இது, கடல் மட்டத்திலிருந்து சுமார் 7,000 அடி உயரத்தில் தமிழ்நாட்டின் திண்டுக்கல் மலைப்பகுதியில் அமைந்துள்ளது.

இதையும் தாண்டி, ஆன்மீகத்திற்கு என்றே சிறப்பு வாய்ந்த இடமாக கொடைக்கானல் மற்றும் அதன் சுற்றுவட்டாரம் விளங்குகிறது.

### பூம்பாறை

மலை வாசஸ்தலத்தின் இளவரசிகளுள் ஒன்றாக, பூம்பாறை கிராமம் அமைந்துள்ளது, ஸ்ரீ குழந்தை வேலப்பர் தமிழ் கடவுள் முருக னுக்கு மிகவும் பிரபலமானது. பூம்பாறை, கொடைக் கானலில் இருந்து 18 கிலோமீட்டர் தொலைவில், இந்தியாவின் தமிழ்நாட்டின் பழனி மலையின் மையத்தில் அமைந்துள்ள ஒரு கிராமமாகும்.

"இந்த முருகன் நினைத்தால் தான் நாம் இங்கு வர முடியும்" என்ற ஐதீகம் இங்கு சொல லப்படுகிறது. புராண காலத்தில் பூம்பாறைக்கு அருகில் உள்ள அடர்ந்த வனப்பகுதியான யானைமுட்டுக்கு வந்த சித்தர் போகர் நவபாஷாணம் மற்றும் மூலிகைகளால் ஆன 3 முருகன் சிலைகளை வடிவமைத்ததாகவும்; முதல் சிலையை பழநியில் உள்ள மலைக்குன்றில் பிரதிஷ்டை செய்தார். 2வது சிலையை பூம்பாறை பகுதியில் பிரதிஷ்டை செய்தார்.

3வது சிலையை பூம்பாறை அருகே மதிகெட் டான் சோலை என அழைக்கப்படும் அடர்ந்த வனப்பகுதியில் உள்ளதாக கருதப்படுகிறது. பழநி மலை மீதுள்ள முருகன் சிலையை தண்டம் கொண்டு வடிவமைத்ததால் அதற்கு தண்ட பாணி என பெயரிடப்பட்டது.

உலகிலேயே நவபாஷாண சிலையை உரு வாக்கி பிரதிஷ்டை செய்தவர் மாமுனி சித்தர் போகர் என்ற மா முனிவராகும். இக்கோவில் மூன்றாயிரம் ஆண்டுகள் வரலாற்றைக் கொண் டதாக கூறப்படுகிறது. இக்கோயிலில் உள்ள சிலையானது போகர் என்னும் சித்தரால் பாஷா ணம் மூலம் உருவாக்கப்பட்டது எனப்படுகிறது.

இந்த கோயில் பழனி தேவஸ்தானத்தின் கீழ் வருகிறது. ஒவ்வொரு வருடமும் பூம்பாறை முருகனுக்கு தைப் பூசத்திற்குப் பிறகு வரும் கேட்டை நட்சத்திரத்தன்று தேர் திருவிழா கொண்டாடப்படுகிறது.







15ம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரி நாதரின் பாடலின் படி, முருகன் அருணகிரி நாதரை அரக்கனிடமிருந்து குழந்தை வடிவில் வந்து காப்பாற்றினார். எனவே இந்த கோவிலின் முக்கிய கடவுள் 'குழந்தை வேலப்பர்' என்று அழைக்கப்படுகிறார்.

மகாபாரத புராணத்தில் பஞ்ச பாண்டவர்கள் தங்களது வனவாசத்தின் ஒரு பகுதியாக பூம்பாறைக்கு வந்தனர். அங்கு போகரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட குருமூப்பு என அழைக்கப்பட்ட முருகன் சிலையை அவர்கள் வழிபட்டதாக கூறப்படுகிறது. 10ம் நூற்றாண்டில், போகர் சீனாவில் இருந்து திரும்பியபோது, பழனி மற்றும் பூம்பாறை (மேற்கு தொடர்ச்சி மலைகள்) நடுவில் மேலும் ஒரு தசா பாசனம் சிலையை கட்டினார்.

அந்த இடம் யானை கெஜம் (போகர் காடு) என்று அழைக்கப்படுகிறது. பிற்காலத்தில் இப்பகுதி யை ஆண்ட சேர மன்னன், குருமூப்பு முருகன் சிலையை சுற்றிலும் ஒரு மண்டபத்தை எழுப்பினார். சேரன் ஆட்சியின் போது இந்த கோயிலுக்கு வந்த முருகபக்தர் அருணகிரிநாதர் இந்த கோயிலில் தங்கி குருமூப்பு முருகனை வணங்கி வழிபட்டார்.

ஒருநாள் இரவில் அவர் உறங்கிக் கொண் டிருந்த போது நள்ளிரவில் அங்கு வந்த ஒரு ராட்சசி அவரை கொல்ல முயற்சித்தாள். இதனை அறிந்த முருகன் குழந்தை வடிவில் வந்து அருணகிரிநாதரை காத்தார் என்பது வரலாறு. இந்த நிகழ்வுகளை தனது ஞானதிருஷ்டியால் அறிந்த அருண கிரிநாதர் முருகனை மனமுருக வழிபட்டார். இந்த நிகழ்வுக்கு பின்னர் இந்த கோயில் குழந்தை வேலப்பர் கோயில் என அழைக்கப்பட்டது. இதனை நினைவுபடுத்தும் வகை யில் கோயில் வளாகத்தில் அருண கிரிநாதருக்கு சிலை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

கோவிலில் உள்ள கல்வெட்டு களின்படி, இந்த கோவில் பற்றிய சிறப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறிய ஆலயத்தின் கருவறையில் எம்பெரு மான் முருகன், ஸ்ரீ குழந்தை வேலப்பர் எனும் திருப்பெயருடன் பேரழகாய் திருஅருட்காட்சி யளிக்கிறார். அதுபோல் பழனி முருகன் போன்று அருள் தர வல்லவர் என்பது இந்த கோவிலுக்கு சென்று அனுபவ ரீதியாக உணர்ந்தவர்களுக்குத் தான் தெரியும்.

இந்த நாள், இந்த நேரம் என்று இந்த வேலய்யன் நினைத்தால் மட்டுமே இவரை தரிசனம் காண இயலும் என்பது (சத்தியமான) ஆச்சர்யமான உண்மையும்கூட.

முன்வினை தோஷங்கள் கரைந்திடவும், திருமணத்தடை நீங்கப்பெற்று நல்வாழ்க்கைத் துணை விரைவில் அமையப்பெறவும், நலமான மகப்பேறு கிடைக்கப்பெறவும், செய்யும் தொழில் சிறப்புடன் மேன்மையுறவும், இந்த குழந்தை வேலப்பரை (எந்நாளிலும், நேரத்திலும்) வழி படுதல் மிகுந்த பலனை தரும்.

மலைப்பகுதிகளில் அமைந்துள்ள கோயில் களில் தேர் வீதியுலா நடைபெறுவது இங்கு மட்டுமே. தேரின் முன்புறம் மற்றும் பின்புறம் வடம்பிடித்து இயக்கப்படுகிறது. இப்படி இரு வடத்தேர் இயங்குவதை இங்கு காணலாம். முருகனடியார்கள் தேர் அச்சின் மீது சுமார் 25 ஆயிரம் தேங்காய்களை உடைக்கும் வழிபாடு இங்கு நடைமுறையாக உள்ளது.

## குறிஞ்சி வேலப்பர்

குறிஞ்சி ஆண்டவர் கோவில் தமிழ்நாட்டின் கோடைமலையில் உள்ள ஒரு முருகன் கோவில். கொடைக்கானல் சுற்றுலா செல் வோருக்கு இதுவும் ஒரு முக்கிய இடமாக உள்ளது.

கொடைக்கானல் பேருந்து நிலை யத்திலிருந்து 4 கி.மீ தொலைவில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. குறிஞ்சி மலர்கள் நிறைந்த பகுதியில் அமைந்துள்ளது இக்கோவில்.

முருகன் திருவுரு ஸ்ரீகுறிஞ்சி ஈசுவரன் என அழைக்கப்படுகிறது. 1936ஆம் ஆண்டில் லீலாவதி என்ற ஐரோப்பிய அம்மையாரால் கட்டப்பட்டது. இவர் இலங்கையில்



புனிதவேல்

இருந்தபோது இந்து சமயத்திற்கு மதம் மாறி பொன்னம்பல இராமநாதன் என்ற தமிழரை மணம் புரிந்தவர். எனவே இவரை லேடி இராமநாதன் என்போரும் உண்டு. இவரது மகளின் வளர்ப்புப் பெண்ணான பத்மினி என்கிற தேவி பிரசாத் பாஸ்கரனும் அவரது கணவர் பாஸ்கரனும் பின்னர் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகத்திற்கு இந்தக் கோயிலை கொடுத்துள்ளனர்.

தற்போதும் குறிஞ்சி ஆண்டவர் கோயிலின் இடதுபுறத்தில் இருந்து பார்த்தால் பழநி மலைக்கோயிலை காணலாம். கொடைக்கானல் வரும் சுற்றுலாப் பயணிகள், குறிஞ்சி ஆண்டவரான முருகனை தரிசனம் செய்து செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

கொடைக்கானல் குறிஞ்சி ஆண்டவர் கோயிலில் மே மாதத்தில் மலர் வழிபாடு நடை பெறும். இதனைக் காண நாடு முழுவதும் இருந்து பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

குறிஞ்சி ஆண்டவர் கோயில் நடையில் குறிஞ்சி செடிகள் உள்ளன. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறையே இச்செடிகள் பூக்கும். கடந்த 2006ல் குறிஞ்சிப் பூக்கள் நீல நிறத்தில் கொடைக்கானலில் பூத்து குலுங்கின. பச்சைப் புடவையை மாற்றி, நீலக்கலரில் புடவை கட்டி பவனி வருகிறாள் கொடைக்கானல் மலை இளவரசி என இந்த அழகை இப்பகுதி மக்கள் சிலாகிக்கின்றனர். குறிஞ்சி மலர் பூக்கும் காலங்களில், பூத்துக் குலுங்கும் மலர்களைக் கொண்டே குறிஞ்சி ஆண்டவர் கோயில் நடை




முழுவதும் அலங்காரம் செய்யப்படுகிறது. மேலும் குறிஞ்சி முருகனுக்கும் இந்த மலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்படுகிறது.

## கும்பூர்

கொடைக்கானலில் இருந்து மேற்கே 42 கிலோமீட்டர் தொலைவில் உள்ள சாலையின் முடிவில் மன்னவனூர் பஞ்சாயத்தில் மஞ்சம்பட்டி பள்ளத்தாக்கு வடிகால் படுகையில் கும்பூர் ஆற்றின் தலைப்பகுதியில் 1,768 மீட்டர் (5,801 அடி), உயரத்தில் அமைந்துள்ளது.

இத்திருக்கோயிலில் சுயம்புவாக முருகப் பெருமான் அருள்பாலிக்கிறார். கேட்ட வரம் கொடுப்பதுடன், இயற்கை

சூழலில் அமைந்துள்ள இந்த கிராமத்தின் முக்கிய வழிபாட்டுத் தலமாகவும் இத்திருக் கோவில் விளங்குகிறது.

இத்திருத்தலம் மிகவும் பழமை வாய்ந்த தாகவும், சக்தி மிக்கதாகவும் கருதப்படுகிறது. இங்குள்ள மக்கள் ஒன்றிணைந்து குழு ஒன்றை அமைத்து கோயில் வழிபாடு மற்றும் விழாக்களை சிறப்பாக வழிநடத்தி வருகின்றனர். சுற்றி மலைகளுக்கு நடுவே இத்திருக்கோயில் அமைந்துள்ளது, இயற்கையின் கொடை என்றே சொல்லலாம்.

தொகுப்பு: புனிதவேல்

தொடர்பு எண்: 9841807572



ராமனுக்கு உதவிய அணிலைப் போன்று
ஆன்மிகத்திற்கு எங்கள் சேவை மிகச் சிறியது

# எங்கள் சேவைக்கு உங்கள் உதவி தேவை

ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக
ஆன்மிகமலர்.காம், ஆன்மிகமலர் மொபைல்–ஆப்,
இ–புத்தகம் ஆகியவற்றை எந்தவித கட்டணமுமின்றி
அனைவரும் படிக்கும் வகையில் இலவசமாக
வெளியிட்டு வருகிறோம்.

**இதுவரை 130 இதழ்களை கடந்துள்ளோம்.**

இன்னும் எங்கள் சேவையை விரிவுபடுத்த
பொருளாதார உதவி தேவைப்படுகிறது.
உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட
வங்கி கணக்கின் மூலம் உதவலாம்.



**ஆன்மிகமலர் டிரஸ்ட்**

Tamilnadu Government Redg.304/2016

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

மேலும் விவரங்களுக்கு 09444228203
எண்ணில் தொடர்பு கொள்ளவும்

# இராசி பலன்




குறிப்பு: ஒருவரது தசா புத்தியே 70–75% வரையிலும், கோட்சாரம் 20–25% வரையும் பலனளிக்கும். ஆகவே இவை பொதுப்பலன்கள் என கொள்ளவேண்டும்.



## மேஷம் முதல் மீனம் வரையிலான 12 ராசிகளுக்கான பலன்கள்

**அடுத்த 15 நாட்களுக்கு தரப்பட்டுள்ளது**

**(16.05.22 முதல் 31.05.22 வரை)**

ஸ்ரீ வைத்தீஸ்வரன் அஸ்ட்ரோ ரிசர்ச் சென்டர், கிருஷ்ணகிரி
கி.கார்த்திகேயன். செல்: 7904761779



**மேஷம்:** ராசியில் ராகு, ராசியாதிபதி செவ்வாய் ராசிக்கு 11 இல் கர்மகாரகன் சனியுடன் பெரிய திட்டங்கள் தீட்டுவீர்கள் எதிர்பார்க்காத திடீர் இலாபம் தன வரவுக்கு வழியுண்டு. ராசிக்கு சனியின் பார்வை சிறிது அலைச்சல், டென்ஷன் ஏற்படும். இரண்டுக்கு பெயர்ச்சியாகும் சூரிய பகவான், புதன் சேர்க்கை பெறுகிறார். கடுமையான விஷயத்தையும் நகைச்சுவையாக வெளிப்படுத்துவீர்கள். உஷ்ண சம்பந்தமாக தொந்தரவுகள் சிலருக்கு உண்டாகலாம். குளிர்ச்சியான உணவு வகைகளை உட்கொள்ளவும். மனைவியிடம் சிறு கருத்து வேறுபாடுகள் ஏற்படும். அஷ்டமத்தில் இருக்கும் சந்திரன் பதட்டத்தை தருவார் 1617 தேதிகளில் பொறுமையை கடைபிடிக்கவும். சுப விரையம் வண்டி வாகன வகையில் செலவுகள், குழந்தைகளின் எதிர்கால தேவைக்கான செலவுகள் ஏற்படும். வேலைக்கு செல்வோருக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். பரிகாரம்: விநாயகர் வழிபாடு, தாயார் வழி உறவுகளுக்கு உதவி.



**ரிஷபம்:** ராசியாதிபதி ராசிக்கு 11 இல், குரு, செவ்வாயுடன் சேர்க்கை, ராசியில் சூரியன் புதன் சேர்க்கை, ராசிக்கு 10 இல் சனிபகவான், 12 இல் ராகு, 6 இல் கேது. வார ஆரம்பத்தில் சுகம் சௌகரியம் கூடும். ஆசைகள் ஈடேறும். நான்காம் வாரத்தில் சுப செலவுகள் ஏற்படும். சிலர் வெளியூர் வெளிநாடு பயணம் மேற்கொள்வர். ராசியில் புதனோடு சூரியன், பிள்ளைகள் விஷயத்தில் சிறிது டென்ஷன் ஏற்படும். கணவன் மனைவி இடையே சிறு பிணக்குகள் ஏற்படலாம். அரசு வழி ஆதாயம் உண்டு. குழந்தைகள் படிப்பில், தேர்வில் சிறப்பாக செயல்படுவார்கள் எதிர்பார்த்த மதிப்பெண்கள் கிடைக்கும். சிலர் சுப செலவுகளுக்காக கடன்கள் வாங்கலாம். தொழியாளர்கள், பணியாளர்களுக்கு முன்னேற்றம் தனவரவு சிறப்பாக இருக்கும். புதிய திட்டங்கள் ஈடேறும். பதட்டத்தை தவிர்த்து நிதானமாக செயல்பட வேண்டும். பரிகாரம்: துர்க்கை அம்மன் வழிபாடு, ஏழை குழந்தைகளுக்கு படிப்புக்கு உதவி செய்தல் நன்று.



**மிதுனம்:** ராசியாதிபதி புதன் ராசிக்கு 12இல் சூரியனுடன், பூர்வ புண்யாதிபதி சுக்கிரன் வார ஆரம்பத்தில் 10 இல், வார இறுதியில் 11 க்கு இடம் பெயர்கிறார். 10, 11 குடைய குரு மற்றும் செவ்வாய் மீனத்தில். சுக சௌகர்ய விஷயங்களில் தடங்கல் தடை ஏற்படும் வண்டி வாகனத்தில் செல்லும் பொது கவனம் தேவை. அனாவசிய பயணங்களை தவிர்ப்பது நல்லது. மனைவி வகையில் ஆதாயம் உண்டு. தொழிலாளர்கள் பணியாளர்கள் வியாபாரிகள் எதிர்பார்த்த தன வரவு ஆதாயம் கிடைக்கும். சிலர் ஜீவ சமாதி குல தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வர். வேலைக்கு முயற்சி

செய்ப்பவர்களுக்கு வேலை கிடைக்கும். பரிகாரம்: குலதெய்வ வழிபாடு. நாக வழிபாடு, தாய்வழி உறவு குழந்தைகளுக்கு உதவி.

**கடகம்:** வார தொடக்கத்தில் ராசியாதிபதி சந்திரன் விருச்சிகத்தில்



எதிர்பார்த்த காரியம் விரைந்து முடியும். 6, 9 க்குடைய குரு 4,11 க்குடைய சுக்கிரனுடன் முறையே ஆட்சி உச்சத்தில், புதிய வீடு, வாகன ஆடம்பர பொருட்கள் சேர்க்கை ஏற்படும் 4 இல் உள்ள கேது இது சம்பந்தமாக கடன்களை ஏற்படுத்துவார். குழந்தைகளின் படிப்பில் மந்த நிலை நீடிக்கும். மாத கடைசியில் சுக்கிரனின் மேஷ பெயர்ச்சி தொழில் முறையில் எதிர்பாராத திடீர் இலாபம் ஏற்படும். 8 உள்ள சனிபகவான் இல் 3, 7, 10 ம் பார்வையாக கர்ம, வாக்கு மற்றும் சுக ஸ்தான பார்வை பெறுவதால் யாருக்கும் ஜாமீன் கையெழுத்து வாக்குறுதி கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. கோவில், குல தெய்வ, குரு வழிபாடு உண்டு. பரிகாரம்: துர்க்கை, நாக வழிபாடு. முதியவர்கள், உடல் ஊனமுற்றோருக்கு உதவி.

**சிம்மம்:** ராசியாதிபதி சூரியன் ராசிக்கு 10 இல் இலாபம் மற்றும் வாக்கு



ஸ்தான அதிபதி புதனுடன் ராசிக்கு 7இல் கர்மகாரகன் சனியின் பார்வை ராசியின் மேல் அவர் செவ்வாயுடன் இணைத்து பார்க்கிறார். மாத இறுதியில் செவ்வாய் 8மிடன் பெயர்கிறார். சுக்கிரன் 9இல் ராகுவுடன். தொழிலாளர்கள், பணியாளர்கள், வியாபாரிகள் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். எழுத்து, வங்கி தொழில் செய்வோர் அதிக இலாபம் எதிர்பார்க்கலாம். சீருடை பணியாளர்கள், தொழிலாளர்கள் அதிகம் உழைக்க வேண்டி இருக்கும் அதற்கு உரிய பலன் கிடைக்கும். சிலருக்கு அரசின் ஆதரவு பதவி உயர்வு கிடைக்கும். தந்தைவழி உறவுகளால் எதிர்பார்க்காத ஆதாயம், வரவு உண்டு. 25, 26 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும். பரிகாரம்: சுப்பிரமணியர் வழிபாடு, சனிபகவான் பிரார்த்தனை. தொழிலாளர்களுக்கு உதவி.

**கன்னி:** ராசியாதிபதி புதன் ராசிக்கு 9 இல் சூரியனுடன் இணைந்து புதாதித்ய யோகத்தை அளிப்பது சிறப்பான அமைப்பு.



எனினும் சூரியன் 12ஆம் அதிபதியாகையால் போதிய ஓய்வு அவசியம். அனாவசிய பயணங்களை தவிர்ப்பது நல்லது. ராகுவுடன் சுக்கிரன் 8ல் இணைவது அவ்வளவு சிறப்பல்ல. குடும்பத்தில் கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வது நல்லது. வீண் விவாதங்களை தவிர்க்கவும். தொழில் வருமானம் சிறப்பாக இருக்கும். தைரியம் உற்சாகம் கூடும். புதிய முயற்சிகள் பலிதமாகும். சிலருக்கு வயிறு, குடல் சம்பந்தமாக தொந்தரவுகள் ஏற்படலாம். 26, 27 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது. சுக்கிரனின் இரண்டாம் இட பார்வை திடீர் பொன் பொருள் சேர்க்கை ஏற்பட வழி உண்டாகும். பரிகாரம்: துர்க்கைவழிபாடு, உடல் ஊனமுற்றோர், வயதானவர்களுக்கு உதவி.

**துலாம்:** ராசியில் கேது, ராசியாதிபதி சுக்கிரன் ராசிக்கு 6 இல் குரு



மற்றும் செவ்வாயுடன் அவ்வளவு சிறப்பான அமைப்பல்ல. 8 இல் சூரியன் புதனுடன். பொதுவில் இந்த மாதம் கிரகநிலை துலாம் ராசிக்கு சொல்லிக்கொள்ளும்படி சிறப்பாக இல்லை. கணவன் மற்றும் தந்தை உடல் நிலையில் கவனம் தேவை. மனதில் இனம் புரியாத கவலை வேதனை உண்டாகலாம். மாத கடைசியில் சுக்கிரனின் மேஷ பெயர்ச்சிக்கு பிறகு முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம். கொடுக்கல் வாங்கல், யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போடுவது போன்ற விஷயங்களில் சிறிது காலம் தள்ளி இருப்பது நல்லது. அரசு பணியாளர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் அதிகம் உழைக்க வேண்டிவரும். குடும்ப நிலவரம் திருப்திகரமாக இருக்கும் அனாவசிய வாக்குவாதங்களை தவிர்க்கவும். காவல்துறையை, சீருடை பணியாளர்களுக்கு உயர்வு உண்டு. பரிகாரம்: விநாயகர் வழிபாடு. தாயார்வழி மூத்த பெண்மணிகளுக்கு உதவி

**விருச்சிகம்:** ராசியாதிபதி ராசிக்கு 5இல் தனகாரகனான குருவுடன்



இருப்பது சிறப்பு. தொழில், குடும்ப விஷயத்தில் எதிர்பார்த்த காரியங்கள் கைகூடும். மகிழ்ச்சி உண்டாகும். சுக சௌகரிய பொருட்களின் சேர்க்கை உண்டாகும். 4 இல் சனி பகவான். தாயாரின் உடல் நிலையில் கவனம் தேவை. சிலர் பூமி, நிலம் வாங்க வாய்ப்புகள் கூடிவரும். மாத கடைசியில் 6ஆம் வீட்டிற்கு சுக்கிரன் பெயர்கிறார் சிலருக்கு மனைவி வழியில் சுப செலவுகள் கடன்கள் ஏற்படலாம். கணவன், மனைவி பரஸ்பரம் உடல் ஆரோக்கியத்தில்

கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும்.7ஆம் இட சூரியனின் பார்வையால் அரசு ஆதரவு, வேலை தொழிலில் முன்னேற்றம் பதவி ஊதிய உயர்வு எதிர்பார்த்தபடி அமையும். மாணவர்களின் படிப்பில் சுமாரான நிலை நீடிக்கும். சிலர் கோயில், சித்தர், குல தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வார்கள். தாயார் வழி உறவுகளால் சில இடைஞ்சல்கள் தடங்கல்கள் மனஸ்தாபம் ஏற்படும். பரிகாரம்: நவகிரக வழிபாடு. தந்தைவழி பெரியவர்களுக்கு உதவி

**தனுசு:** வார தொடக்கத்தில் 4 ஆமிடத்தில் ராசியாதிபதியுடன் சுக்கிரன், செவ்வாய் சேர்க்கை 3 இல் சனி பகவான், 5 இல் ராகு, 6 இல் புதன் சூரியன் 11 இல் கேது, மாத கடைசியில் சுக்கிரன் 5க்கு பெயர்ச்சியாகிறார். சுக சௌகரியங்கள் கூடும். பிள்ளைகள் படிப்பில் சிறந்து விளங்க அதற்காக அதிகம் உழைப்பார்கள். வண்டி வாகன சேர்க்கை உண்டாகும். வீடு, நிலம் வாங்கும் வாய்ப்பும் சிலருக்கு உருவாகும். உஷ்ண சம்பந்தமான அல்லது வயிறு சம்பந்தமான தொந்தரவுகள் சிலருக்கு ஏற்படலாம். பணியாளர்கள், வியாபாரிகளுக்கு சாதகமான நிலையான முன்னேற்றம் உண்டு. சிலர் புதிய தொழில், அல்லது இருக்கும் தொழிலில் விரிவாக்க முயற்சிகளை முன்னெடுப்பார்கள். பரிகாரம்: தக்ஷிணாமூர்த்தி, விஷ்ணு வழிபாடு. சகோதரி வழி உறவுகளுக்கு உதவி.



**மகரம்:** ராசியாதிபதி ராசிக்கு இரண்டில், விரயாதிபதி 3இல் பஞ் சமாதிபதி சுக்கிரனுடனும், சுகாதிபதி செவ்வாயுடனும் 5இல் அஷ்டமாதிபதியுடன் புதன். தொழில் குடும்ப நிலை சீராக இருக்கும். மாணவர்கள் கவனசிதறலுக்கு ஆளாகாமல் இருக்கவேண்டும். பிள்ளைகள் வழியில் செலவுகள் உண்டு. வருமானம் அதிகாரிகளின் ஆதரவு சீராக இருக்கும். வியாபாரிகள் தொழில் நிலை சீராக இருக்கும். சுப விரையம் தெய்வ வழிபாடுகள் உண்டு. மாத கடைசியில் ஏற்படும் சுக்கிர பெயர்ச்சி புது வீடு, வண்டி வாகன சேர்க்கை ஏற்படும். அரசு வழி ஆதாரம், கலை இலக்கிய துறை சேர்ந்தவர்களுக்கு முன்னேற்றம் உண்டு. தைரியம் கூடும். 18, 19 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும் பரிகாரம்: ஹனுமான் வழிபாடு. பறவைகள், சிறு பிராணிகளுக்கு உணவளித்தல்



**கும்பம்:** ராசியாதிபதி ராசியில், 2 இல் இலாப, தன ஸ்தான அதிபதி 3, 4குடைய செவ்வாய், சுக்கிரனுடன் இணைவு சிறப்பான கிரக இணைவு. 4இல் சூரியனுடன் பூர்வ புண்யாதிபதி புதனுடன். நிலையான ஸ்திரமான எதிர்கால முடிவுகளை எடுப்பீர்கள். எதிர்பார்த்த திட்டமிட்ட வேலைகளை குடும்பத்தாருக்கு சிறப்பாக நிறைவேற்றி தருவீர்கள். மனைவிக்கு கால் வலி, மூட்டுவலி பிரச்சனைகள் உண்டாகலாம். மாணவர்களின் படிப்பில் மந்தநிலை நீடிக்கும். 3இல் உள்ள ராகு அதற்கு ராசிஅதிபதியின் 3ஆம் பார்வை குருட்டு தைரியம் துணிச்சலை தரும். யோசித்து தீர ஆராய்ந்து முடிவுகளை எடுக்க வேண்டும். இரண்டில் உள்ள செவ்வாய் பேச்சில் நிதானத்தை கடைபிடிக்கவேண்டும். பணியாளர்கள், தொழிலாளர்கள் நிலைமை சீராக இருக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு, ஊதிய உயர்வு உண்டு. பிள்ளைகளிடம் பொறுமையை கடைபிடிக்கவும். மாத கடைசியில் எதிர்பார்த்த பொருள் சேர்க்கை உண்டாகும். பரிகாரம்: மகாலக்ஷ்மி, சுப்பிரமணியர் வழிபாடு. கன்னிப்பெண்களுக்கு அலங்கார பொருட்களுதவி.



**மீனம்:** ராசியாதிபதி குரு ராசியில் தன மற்றும் தர்மாதிபதியுடன் உடன் சுக்கிரன் மாத இறுதியில் மேஷ பெயர்ச்சி. தொழில், பணியாளர்களுக்கு நிலைமை சீராக இருக்கும். சிறு சிறு டென்ஷன்கள் வந்து போகும். தனவரவு சீராக இருக்கும். பழைய கடன்கள் வசூலாகும். மாணவர்கள் கடுமையாக உழைக்கவேண்டிவரும். உரிய பலன் உண்டு. மனைவியில் நீண்டகால ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். 18, 19 தேதிகளில் புதிய திட்டங்களை தீட்டுவீர்கள் விரைந்து பயனடைவீர்கள். தாயார் வழியில் பொருளுதவி ஆதாயம் உண்டு. சீருடை பணியாளர்கள், தொழிலாளர்களுக்கு எதிர்பார்த்த ஆதரவு, உதவிகள் கிடைக்கும். தந்தையாருக்கு சிறு உபாதைகள் ஏற்படலாம். வங்கி, சேவைதுறைகளில் பணியாற்றுபவர்களுக்கு ஏற்றமான காலம். பதவி, ஊதிய உயர்வு ஏற்படும். பூர்வீக சொத்தில் பங்கு கிடைக்கும். பரிகாரம்: வெள்ளிக்கிழமை ராகு கால பூஜை. சுமங்கலி பெண்களுக்கு ரவிக்கை மஞ்சள், குங்குமம் தானம்.






# நலம் தரும் மருத்துவம்

- வாழைப்பூ வாரம் ஒருமுறை சாப்பிட்டால் வயிற்றுப்புண் குணமாகும்.
- நாயுருவி வேரை அரைத்து கோலி குண்டு அளவு உருட்டி 15 நாள் சாப்பிட்டு வர வெறிநாய் கடி குணமாகும்.
- அகத்தி கீரையை நிழலில் உலர்த்தி பொடி செய்து காலை, மாலை 4 ஸ்பூன் பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் குணமாகும்.
- கருணைக்கிழங்கு வாரம் இருமுறை உணவில் சேர்த்தால் மூலம் கட்டுப்படும்.
- கோதுமை கஞ்சி மாதவிடாய் காலங்களில் சாப்பிட்டால் அக்காலங்களில் ஏற்படும் உடல் சோர்வை நீக்கி பலம் பெறும்.
- இரவு படுக்குமுன் பேரிச்சம்பழம், பால் சாப்பிட்டு வர உடல் புஷ்டியாகும்.
- ஞாபக சக்தி பெருக பாதாம்பருப்பு, வெண் டைக்காய், உருளைக்கிழங்கு, தக்காளி சிறந்தவை.
- வெள்ளை வெங்காயத்தை துணியில் கட்டி சாறு எடுத்து, அந்த சாற்றை இரண்டு காதுகளிலும் ஊற்றினால் காக்காய் வலிப்பு குணமாகும்.
- மருதாணி பூவை தேங்காய் எண்ணையில் ஊற வைத்து வெயிலில் காய வைத்து தொடர்ந்து தேய்த்து வர வழுக்கைத்தலையில் முடி வளரும்.
- மாமரத்தின் தளிர் இலையை உலர்த்தி பொடியாக்கி வைத்துக்கொண்டு ஒரு ஸ்பூன் வென்னீரில் கொதிக்க வைத்து தினமும் காலை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர நீரிழவு நோய் குணமாகும்.
- இழந்த இயற்கை நிறத்தை பெற அத்திப்பழம் சிறந்தது. அத்திக்காய் உதட்டில் வெடிப்பு, உதட்டுப்புண்ணுக்கு சிறந்தது.
- மருதாணி மஞ்சள் சேர்த்து அரைத்து காலில் ஆணி பாய்ந்த இடத்தில் கட்டி வர காயம் குணமாகும்.
- ஓமத்துடன் பூண்டு பொடி செய்து போட்டு கசாயம் வைத்து குழந்தைகளுக்கு கொடுக்க குழந்தைகளின் வாந்தி, கொட் டாவி குறையும்.

- தூதுவளை சாறு இரண்டு சொட்டு காதில் விட்டு வர காது அடைப்பு நீங்கும்.
- மாதுளம் பூவை கசாயம் செய்து குடித்து வர வயிற்றுக்கடுப்பு குணமாகும்.
- சுரைக்காய் வாரம் 2 தடவை சாப்பிட தொப்பை குறையும்.
- தாமரை இலை, பூ உலர்த்தி தூள் செய்து காபி போல் பருகி வர இருதயம் பலம் பெறும். இரத்தம் சுத்தம் அடையும். ஞாபக சக்தி பெருகும்.
- குங்குமப்பூவுடன் சம அளவு தேன் கலந்து மூன்று நாட்கள் தினசரி 2 வேளை உட்கொள்ள குடல் புண் குணமாகும்.
- 10 கிராம் உரித்த வெள்ளைப்பூண்டை பாலில் வேக வைத்துக் கடைந்து சாப்பிட வாயு, செரியாமை, சளி தீரும். குடல் புழுக்கள் மடியும்.
- மருதாணி இலையை நல்லெண்ணெயில் போட்டு காய்ச்சி வெந்து வரும்போது இறக்கி ஆறியபின் மை போல அறைத்து வைத்துக்கொண்டு துணியில் தடவி புண் மீது வைத்துக்கட்டி வர ஆறாத புண் ஆறும்.
- கசகசா, வால்மிளகு, வாதுமைப்பருப்பு, கற்கண்டு பொடித்து தேன் விட்டு 5 கிராம் பாலுடன் காலை, மாலை சாப்பிட்டு வர இரத்த மூலம் குணமாகும்.
- பப்பாளிப்பாலை வாய் மற்றும் நாக்கில் உள்ள புண்ணிற்கு தடவி வர வாய்புண் குணமாகும்.
- காலையில் பல் துலக்கியதும் வெறும் வயிற்றில் பச்சை வெங்காயத்தை சாறு பிழிந்து ஒரு ஸ்பூன் தேன் கலந்து குடுத்து வர பக்கவாதம் குணமாகும்.
- பச்சை இஞ்சி சாறு தேன் கலந்து தொடர்ந்து 30 நாட்கள் சாப்பிட்டு வர தலை சுற்றல் குணமாகும்.
- எலுமிச்சை சாற்றால் கைகளை கழுவி காயவிட்டு பின் மருதாணி இட்டுக்கொண்டால் மருதாணி சிவப்பாக பிடிக்கும்.
- நெல்லிக்காய் அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் இளநரை கருமை நிறத்திற்கு மாறும்.
- கை கால் உணர்வு இல்லாமல் இருந்தால் 50 கிராம் வேப்ப எண்ணெயில் கட்டி கற்பூரம் ஊறவைத்து தினசரி காலையில் எழுந்தவுடன் உணர்வு இல்லாத இடத்தில் சூடு பறக்க தேய்த்து வர உணர்வு திரும்பும்.
- மஞ்சள் துண்டுகளை சுண்ணாம்புத் தெளிவு நீரில் ஊற வைத்து உலர்த்தி இடித்து தூள் செய்து தேக்கரண்டி தேன், வென்னீர் அல்லது பாலில் கலந்து குடிக்க வரட்டு இருமல் குணமாகும்.
- செம்பருத்தி பூவை நீரில் போட்டு அரைமணி நேரம் கழித்து அந்த நீருடன் பூவையும் சாப்பிட்டு வர உடல் நிறம் சிவப்பாகும்.
- இரண்டு இஞ்சித்துண்டுகளை இடித்து சாறு பிழிந்து வைத்து தெளிந்த நீரை கீழே ஊற்றி அடியில் உள்ள மண்டியை தேனுடன் கலந்து பருக்கள் உள்ள இடத்தில் தடவி வர பருக்கள் மூன்று நாட்களில் குணமாகும்.




- சீரகம், கருஞ்சீரகம் இரண்டையும் பொடி செய்து கருவேப்பிலை, வெங்காயம், வெள்ளைப்பூண்டு சேர்த்து தயிருடன் கலந்து குடிக்க வயிற்று உப்பசம், பேதி குணமாகும்.
- கறிவேப்பிலை அரைத்து தேங்காய் எண்ணெயில் கலந்து காய்ச்சி தலையில் தேய்த்து வர தலைமுடி கருப்பாகவும் அடர்த்தியாகவும் வளரும்.




# எல்லை இல்லா பிரபஞ்சத்தை குறிக்கும் ஸ்ரீ சக்ரம்

உலக அன்னையின் திருவுருவத்தை சனாதனமான இந்து மதத்தின் சாக்த பிரிவு மூன்று நிலையாக வகைப்படுத்துகிறது முதலில் ஸ்தூல வடிவம் இரண்டாவது சூட்சம வடிவம் மூன்றாவது காரண வடிவம் என்பதாகும் ஸ்தூல வடிவம் என்பது பாசம் அங்குசம் கரும்பு வில் மலர் அம்பு ஆகியவற்றை கொண்டு இடது பாதத்தை ஊன்றியும் வலது காலை மடித்தும் அமர்ந்திருக்கும் திருக்கோலமாகும் காரண வடிவம் என்பது ஸ்ரீ அன்னையின் மூல மந்திர ஒலிவடிவமாகும் சூட்சம வடிவம் என்பது புகழ் பெற்ற ஸ்ரீ யந்திரம் என்ற ஸ்ரீ சக்ர வடிவாகும்

மோகினி ஹிருதயம் எனும் நூல் ஸ்ரீ சக்ர வடிவை பற்றி மிக எளிமையாகவும் தெளிவாகவும் பல விவரங்களை நமக்கு தெரிவிக்கிறது இந்த நூலை வாமகேஷ்வர தந்திரம் என்று வேறொரு பெயராலும் அழைக்கிறார்கள் இதில் தந்திர மார்க்கம் சார்ந்த உபாசன முறைகள் விவரிக்கப்பட்டுள்ளது ஸ்ரீ சக்ரம் என்பது பிரபஞ்சவெளியில் எங்கும் வியாபித்துள்ள பரம்பொருளின் தன்மையை ஒருமை பாட்டை விளக்கு வதே ஆகும் இந்த விளக்கத்தை ஒவ்வொரு மனிதனும் நன்கு விளங்கிகொள்ள ஒன்பது நிலைகளை கடந்து செல்ல வேண்டும் அதாவது மனிதனுக்கும் பிரம்மத்திற்கும் இடையில் ஒன்பது மறைப்புகள் உள்ளன இந்த் மறைப்புகளை ஸ்ரீ சக்ர தத்துவம் ஒன்பது ஆவரணங்கள் என்று பெயரிட்டு அழைக்கிறது

**கடவுள் உருவாக்கிய மதம்**

ஸ்ரீ சக்ரம் என்பது எல்லை இல்லாத பிரபஞ்சத்தை குறிப்பதாகும் அண்டவெளிக்கு துவக்கமும் கிடையாது முடிவும் கிடையாது அப்படி பட்ட அண்டத்தின் ரகசியத்தை மனித அறிவால் எக்காலத்திலும் முழுமையாக அறிந்து கொள்ள முடியாது அப்படி முடியாத விஷயத்தை அறிந்து கொள்ள அக்கால ரிஷிகளும் முனிவர்களும் முயற்சித்து கண்டறிந்த மெய்ஞான ரகசிய வடிவமே ஸ்ரீ சக்ரமாகும் இதை ஒரு பிரபஞ்ச கணித கண்டுபிடிப்பு என்றும் சொல்லலாம் ஒரு புள்ளிக்கு 360 பாகைகள் உண்டு ஒவ்வொரு தனித்தனி பாகையில் இருந்து புறப்படும் கோடுகள் பிரபஞ்சவெளியில் முடிவே இல்லாமல் நீண்டு கொண்டே கொண்டே செல்லும் அந்த

கோடுகள் அனைத்தும் ஒரே இடத்தில் அதாவது புறப்பட்ட இடத்திலேயே வந்து சேர்வதால் வட்டமாகவோ கோளமாகவோ தோற்றம் அளிக்கும் அந்த வடிவத்தை இரண்டு பாகமாக பிளந்தால் 180 பாகைகள் கொண்ட அரைவட்டம் கிடைக்கும் நான்காக பகிர்ந்தால் ஒவ்வொரு பகுதிக்கும் 90 பாகைகள் பிரிந்து நான்கு துண்டுகளாக விரிவடையும் இப்போது அந்த தோற்றத்தை பார்த்தால் ஒரு கூட்டல் குறியை போல நம் கண்ணுக்கு தெரியும் இது தான் சிவ சக்தி ஐக்கியத்தின் வெளிப்பாடாக அமையும் அது தான் பிரபஞ்சத்தின் அக்ஷர வடிவாகும்

இந்த அக்ஷர வடிவம் க என்ற எழுத்தாக அமைந்திருக்கிறது இந்த எழுத்து வடிவம் தான் படைப்பு தத்துவத்தின் வெளிப்புற சின்னமாகும் எல்லையே இல்லாத பிரபஞ்சம் க வடிவ சதுரத்துக்குள் காணப்படுகிறது.

இந்த சதுரத்தில் அணிமா லகிமா,மகிமா பிரத்தி பிராம வசித்துவம் சத் சித்துவம் என்ற அஷ்டமா சித்துகள் அடங்கியிருந்து ஆட்சி செய்கிறது.

இந்த சகரத்தில் உள்ள நான்கு புற சதுர ரேகைகளும் அண்ட வெளியை காவல் செய்யும் லோக பாலகர்களாக உருவகப்படுத்தப்பட்டு நிர்மானிக்கப்படுகிறார்கள் இச்சக்கிரத்தின் உள் வரிகளில் காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாச்சரியம் ஆகிய ஆறு குணங்களை கட்டுப் படுத்தும் பண்பு மற்றும் அறிவு ஆகிய இரண்டு நற்குணங்கள் மறைந்துள்ளன இதை பிரகட யோகினிகள் என்று அழைக்கிறார்கள்

நிலையான பார்வையை ஒரே இடத்தில் நிறுத்தி வைத்தால் வட்டத்திற்குள் சதுரம் தோன்றும் ஸ்ரீ சக்ர சதுரத்திற்குள் இதே போன்று தான் வட்டம் தோன்றுகிறது இது நமது கண்களில் உள்ள கருவிழிகள் போல் தெரிவதால் அண்டத்தின் ஒத்தைக் கண் எனவும் சுதர்மம் என்னும் அண்ட கருவாகவும் கருதப்படுகிறது.

சதுரம் என்பது ஆகாச வெளியினையும் வட்டம் என்பது ஆகாச காலத்தையும் குறித்து நிற்கிறது வெளி என்ற சதுரம் வளர்ந்து கொண்டே செல்கிறது காலம் என்ற வட்டம் சுழன்று கொண்டே செல்கிறது.

பார்வையை இன்னும் சற்று கூர்மை படுத்தி



வட்டத்தை பார்த்தோம் என்றால் வட்டத்திற்குள் வட்ட வட்டமாக மூன்று வட்டங்கள் தோன்றும் இதில் இந்திரன் அக்னி எமதர்மன் நிருதிதேவன் வருணன் வாயு குபேரன் ஈசானன் ஆகிய எட்டு திக்கின் அதிபதிகள் நிற்கிறார்கள் ஒரு சதுரத்தில் அதற்குள் இருக்கும் வட்டத்தை அதாவது சதுரமான அண்டவெளியும் அதற்குள் இருக்கும் பூகோளத்தையும் எட்டு பாகமாக்கி அஷ்டதிக்கிலும் பிரபஞ்சம் பறந்து விரிந்துள்ளதை ஸ்ரீ சக்ர குறியீடுகள் காட்டுகின்றன



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

ஸ்ரீ சக்ரத்தின் வட்டத்தில் உள்ள நடுவட்டம் அகமுகமான வழிபாட்டால் பெருகக்கூடிய கொல்லாமை வெகுளாமை புலனடக்கம் பொறுமை தவம் வாய்மை அன்பு ஆகிய நற்குணங்களை வரிசைபடுத்தி காட்டுகிறது அதற்கு அடுத்த வட்டத்திற்குள் மனிதனின் 360 சுவாச கூறுகளான காலம் நிற்கிறது.

இந்திய நாள்கணக்கு படி ஒரு நாளைக்கு அறுபது நாழிகைகள் உண்டு ஒரு நாழிகையில் அதாவது 24 நிமிடத்தில் ஒரு மனிதன் விடும் சுவாசத்தின் எண்ணிக்கை 360 இந்த 360தை 60 நாழிகையால் பேருக்கும் போது சராசரியாக ஒரு மனிதனின் தினசரி சுவாசம் 21.600 ஆகும்.

ஒவ்வொரு நாழிகைக்கான 360 சுவாசத்தை பாகங்களாக கொண்டோம் என்றால் அது ஒரு வட்டமாக வரும் இந்த பாகம் காலத்தை குறிப்பதாகும் இந்த காலம் என்னும் உள் வட்டம் கிருதயுகம்(அ) திருதயுகம் (அ) திரேதாயுகம் 2. திரேதாயுகம் 3. துவாபரயுகம் 4. கலியுகம் ஆகிய நான்கு யுகங்களாக சுழன்று வருகிறது.

இப்படி வட்டமும் சதுரமும் அண்டவெளியாகவும் காலமாகவும் விளங்கி மூலாதாரத்தில் கனலாக வடிவெடுக்கிறது இதை நெருப்புக்குள் நெருப்பு அல்லது சிவத்துக்குள் சக்தி அல்லது சகதிக்குள் சிவம் என்றும் சொல்லாம் இந்த மூன்றாவது வட்டத்தில் பத்து இதழ் கொண்ட தாமரை ஸ்ரீ சக்ரத்தில் மலர்கிறது. (.....அடுத்த இதழில்)

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434

aanmeegamalar.com வழங்கும்
தினம் ஒரு திருக்குறள்



ஆன்மிகமலர்.காம் இணையதளம் சார்பில் தினமும் ஒரு திருக்குறளை வாட்சப்பில் பெற விரும்புபவர்கள் 9444228203 என்ற வாட்சப் எண்ணிற்கு Thirukkural என டைப் செய்து அனுப்பிவையுங்கள்.
aanmeegamalar.com - whatsapp குருப்பில் இணைந்து
தினமும் ஒரு அழகிய வடிவமைப்புடன் கூடிய திருக்குறளை பெறுங்கள்

# 130 இதழ்களை கடந்துள்ளோம்

ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக மூன்றுவித சேவைகளை செய்து வருகிறோம்

1.ஆன்மிகமலர்.காம் 2.ஆன்மிகமலர் Mobile app

3. ஆன்மிகமலர் இ-மேகசின்

## எங்களது அடுத்த சேவையாக

ஆன்மிகமலர் பப்ளிகேஷன் வாயிலாக

திருக்குறள், சிவபுராணம், கந்தசஷ்டி கவசம் ஆன்மிக எழுத்தாளர்களின் ஆன்மிக தொகுப்பு, ஆன்மிக துணுக்குகள், மகான்களின் சரித்திரம், அறிவுரைகள், பழமொழிகளின் தொகுப்பு,

போன்றவற்றை இ-பப்ளிகேஷன் முறையில் வண்ணமயமான இ-புத்தகங்களாக தயாரிக்கவிருக்கிறோம்.

இந்த புத்தகத்திற்கு sponsor செய்ய விரும்புபவர்களை சிறப்பிக்க, அவர்களின் குடும்ப விசேஷங்கள், திருமணம், பிறந்த நாள், கிரகபிரவேசம் போன்ற சுப நிகழ்வின் நினைவாக அல்லது அவர்களது தொழில் சம்பந்தப்பட்ட விளம்பரங்களை வெளியிடுவதற்காக இந்த புத்தகத்தில் ஒரு பக்கம் ஒதுக்கித்தரப்படும். இதன்மூலம் எங்கள் சேவையில் நீங்களும் பங்கேற்று இறை சிந்தனையை பரப்பலாம்.

sponsor செய்ய விரும்புபவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்:

சி.வி.நடராஜன் 9444228203





# ஆன்மிக உலகின்

# முதல் இலவச

# இணைய இதழ்

## இதுவரை வெளிவந்த
## அனைத்து இதழ்களையும்
## கட்டணமின்றி

aanmeegamalar.com
aanmeegamalr (app)–ல்
படித்து பயன்பெறலாம்

சத்தான நமது பாரம்பரிய உணவிற்கு
முக்கியத்துவம் தருவோம், கபசுபகுடிநீர், அசுவகந்தி,
தேன் குடிநீர், இஞ்சி, மிளகு, நிலவேம்பு,
போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொண்டு

**உடல் நலம் பேணி காப்போம்**

# மரணம் ஒரு பரிசு

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் அருளுகிறார்: “ உறக்கம் இன்பமானது. ஏனெனில் நீங்கள் அந்த நாளின் கவலைகளை மறக்கிறீர்கள். அவ்வாறே மரணம் என்ற ஆழ்ந்த உறக்கமும்கூட. அது வரும்பொழுது மிகவும் இன்பமானது. ஆனால் வாழ்க்கைப் பள்ளியின் உங்களது கடினமான பாடங்களிலிருந்து தப்பி ஓடுவதற்காக மரணத்தை விரும்பாதீர்கள். அது தவறு. இந்த வாழ்வில் உங்களது சோதனைகள் எதுவாக இருப்பினும், நீங்கள் அவற்றில் துணிவுடன் தேர்ச்சி பெற வேண்டும். இங்கே நீங்கள் வெற்றிபெறும்பொழுது, மரணம் ஒரு பரிசாக வருகிறது. அது துயரத்தின் முடிவு. யாரேனும் ஒருவர் பெரும் வேதனையில் இருக்கும்பொழுது ‘எவ்வளவு பயங்கரமானது’ என மக்கள் எண்ணுகின்றனர். மேலும் அவர் இறந்துவிட்டால் ‘அவர் போக வேண்டியதாயிற்றே’ என மிக வருந்துகின்றனர். அவரது நண்பர்களும் அன்பிற்குரியவர்களும் அவரைச் சூழ்ந்து ‘ஓ, எவ்வளவு வருந்தத்தக்கது’ என புலம்புகிறார்கள். ஆனால் அவர்கள் தவறான கருத்தைக்கொண்டுள்ளார்கள். மரணம் அவருக்கு அனைத்து துயரங்களிலிருந்தும் விடுதலை எனும் பரிசை வழங்கியுள்ளது. அவர்களைவிட இறந்தவர் மிக நன்றாக இருக்கிறார். அவர் இனி ஒருபோதும் வலி மற்றும் அசௌகரியம் போன்றவற்றை அனுபவிக்க வேண்டியதில்லை. அவர் மகிழ்ச்சியாக இருக்கிறார். அவர் விடுதலை பெற்று இருக்கிறார். ஆதலால் உங்களுக்குரிய நேரம் வந்து நீங்கள் இறக்கப்போகிறீர்கள் என்று கூறப்படும்பொழுது புன்னகை செய்து பதில் கூறுங்கள், “அவ்வளவுதானா? நல்லது. நான் எல்லா வேதனைகளிலிருந்தும் பொறுப்புகளிலிருந்தும் விடுதலை பெற்றிருப்பேன்.”

மேலும் அவர் தொடர்கிறார்: “நான் ஒருதடவை இறந்துகொண்டிருந்த ஓர் இளைஞனைப் பற்றிய நான் கண்ட மனக்காட்சியை எழுதியிருந்தேன். அதில் மரணத்தைக்குறித்து சரியான மனப்பான்மையை இறைவன் எனக்குள் காண்பித்தருளினான். அந்த இளைஞன் படுக்கையில் படுத்துக்கொண்டிருந்தான். அவன் வாழ்வதற்கு இன்னும் ஒரு நாள் மட்டுமே உள்ளது என மருத்துவர்களால் கூறப்பட்டிருந்தான். அவன் பதிலளித்தான், “ எனது பேரன்பனை அடைய இன்னும் ஒரே நாள்! மரணம் அமரத்துவத்தின் வாயில்களைத் திறக்கும்பொழுது துன்பமாகிய சிறைக்கம்பிகளிலிருந்து நான் விடுதலை அடைவேன். எனக்காக அழாதீர்கள். நீங்கள் இந்தத் தனிமையான கரையின்மேல் இன்னும் வருந்துவதற்கும் துக்கப்படுவதற்கும் பின்தங்கி இருக்கிறீர்கள். நான்தான் உங்களுக்காக இரக்கப்படவேண்டும்.”

“மரணத்தைக் கண்டு அச்சம்கொள்ள காரணம் இல்லை, நாம் அஞ்சுவது





குருப்ரியா

மரணவேதனைக்குத்தான். மரணத்தின் வேதனை மிகச் சொற்பமே. ஆனால் நாம் நமது பழைய ஆடைகளை மாற்றுவதுபோல், பழுதாகிப்போன நமது பழைய உடலை மாற்றுவதற்குரிய சக்தியை இறைவன் ஏன் நமக்கு வழங்கவில்லை? இந்த உடல் மூப்படையும்பொழுதோ அல்லது பலவீனம் அடையும்பொழுதோ இறந்துவிட்டு மீண்டும் பிறக்க வேண்டியது இன்றி ஓர் இளமையான உடலில் வெளிவர நீங்கள் விரும்பமாட்டீர்களா? இதனைத்தான் சில யோகியர் செய்கின்றனர்."

வங்காள விரிகுடாவில் உள்ள ஒரு சிறிய தீவில் ஒரு மகான் வசித்து வந்தார். ஒரு நாள் அவர் விறகுக் குவியல் மீது அமர்ந்திருப்பதை அவரது சீடர்கள் கண்டனர். அவர்களுக்கு அற்புதமான மெய்யுரைகளை அவர் கூறினார். அவர் தமது சொற்பொழிவை முடித்ததும் அவர்கள் வினவினர். " நீங்கள் ஏன் விறகின்மீது அமர்ந்திருக்கிறீர்கள்?" "இந்த உடலை தகனம் செய்கின்ற தொந்தரவை உங்களுக்குத் தராமலிருப்பதற்காகவே," என அவர் பதிலுரைத்தார். "நான் இங்கு நீண்டகாலம் தங்கிவிட்டேன். இப்போது இந்த உடலைவிட்டுவிட முடிவு செய்துள்ளேன்"எனக் கூறிவிட்டு அவர் தீக்குச்சியை எடுத்து சிதையை மூட்டிக் கூறினார்,"நான் உயிருடன் எரிகிறேன் என்று கருதினால், தயவு செய்து நீங்களே இங்கே வந்து இந்த உடல் இறந்து விட்டதைப் பாருங்கள்," அவர் அவ்வாறு கூறிவிட்டு சுய நினைவுடன் தம் உடலை நீத்தார். பக்தர்கள் விரைந்து சென்று உண்மையாகவே அவரது உடல் உயிரின்றி இருப்பதைக் கண்டனர்.

மேலும் அவர் கூறுகிறார்: "லாஹிரிமகாசயர் இதே முறையில் தமது உடலை நீத்தார். தான் செல்லப்போவதை தன்னைச்சுற்றிலும் குழுமியிருந்த பக்தர்கள் கூட்டத்திற்கு அறிவித்தபடியே, அவர் தமது விழிகளை மேலே உயர்த்தி, உடலை நீத்தார். இவ்வாறுதான் நீங்கள் உடலை ஒரு தற்காலிகக் குடியிருப்பாக பாவித்து நடத்தவேண்டும் என்று மகான்கள் கூறுகிறார்கள். அதனுடன் பற்றுதல் கொண்டோ அல்லது அதனால் கட்டுப்படுத்தப்பட்டோ இருக்காதீர்கள். இந்த வாழும் உணர்ச்சிப் பிணத்தின் பின்னேயுள்ள ஒளியின் எல்லையற்ற ஆற்றலை ஆன்மாவில் அழிவற்ற உணர்வுநிலையை உணர்ந்து கொள்ளுங்கள்."

மேலும் அவர் தொடர்கிறார்: "மரணத்திற்குப் பின்னாலான வாழ்வு எவ்வளவு மகத்தானது ! இந்தப் பழைய எலும்புகளின் மூட்டையை, அதன் அனைத்து தொந்தரவுகளுடனும் இழுத்துச் செல்லவேண்டிய அவசியம் இனியில்லை. சூட்சும சுவர்க்கத்தில் சுதந்திரமாக, உடல் ரீதியான கட்டுப்பாடுகளால் தடுக்கப்படாமல் இருப்பீர்கள். சூட்சம உலகம் மேகங்களில் எங்கோ ஓரிடத்தில் தனித்து இல்லை இது இந்தப் பௌதீகப் பிரபஞ்சத்தின் ஸ்தூல தன்மைக்குச் சற்றுப்பின்னே மறைந்துள்ள எல்லையற்ற அழகு மற்றும் பலவகைப்பட்ட நிலையின் மற்றொரு பரிமாணம் ஆகும்ஞ். எனது உட்பக்க உணர்வு நிலையில் நான் எல்லா நேரமும் அந்த சூட்சும உலகிலேயே இருப்பதால், எனக்குத் தெரியும். ஒப்பிடுகையில், இந்த உலகம் ஒரு பைத்தியக்காரவிடுதி; சூட்சும உலகில் நீங்கள் உங்கள் விருப்பத்திற்கேற்ப பொருட்களை வரவழைக்க முடியும். உங்களுடைய சூட்சும காரில் நீங்கள் எவ்வளவு தூரத்திலும்







மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர்
மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

உடனடியாகப் பயணிக்க முடியும். நீங்கள் பூக்களை விரும்பினால், அவற்றை வெறுமனே விரும்பி தீர்மானிப்பதாலேயே உடனே அவை அங்கிருக்கும். அவை உங்களுக்கு இனிமேலும் தேவைப்படவில்லையெனில், அந்த சிந்தனையை விலக்கினால் அவை மறைந்துவிடும். நீங்கள் கனவுகளில் இவற்றை ஆழ்மன உணர்வு நிலையில் செய்கிறீர்கள். நீங்கள் அவற்றை இந்த ஸ்தூல உலகில்கூட செய்ய முடியும். ஆனால் இறைவனைப் போன்றே நீங்களும் படைப்பதற்காக மிகவும் அதிகமான, மன ஆற்றலை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.”

“ஆதலால் நினைவில் கொள்ளுங்கள்: மரணத்தைக் கண்டு அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை. நீங்கள் இறைவனது திரையரங்கில் இருக்கிறீர்கள். காட்சி முடிந்ததும், அதைப்பற்றி அழவேண்டாம். ஒரு முறை நான் ஒரு திரைப்படம் பார்த்தேன். அதில் கதாநாயகன் கொல்லப்பட்டான். நான் மிக்க வருத்தமுற்றேன். பின்னர் நான் நினைத்தேன்,” நன்று. அடுத்து காட்சியில் மீண்டும் அவர் திரையில் வருவார். அவர் திரும்பவும் உயிருடன் அவர் வரும்வரை நான் காத்திருப்பேன்.” பின்னர் மீண்டும் ஒருமுறை கொல்லப்படும்முன்னர், நான் திரையரங்கைவிட்டு வெளியேறிவிட்டேன். இறந்துவிட்டு சூட்சும உலகில் விழிக்கின்ற ஆன்மாக்களுடனான நிகழ்வும் அவ்வாறேதான். அவர்கள் ஸ்தூல படக்காட்சியின் திரையைவிட்டடு விலகி சூட்சும படக்காட்சியின் திரையில் மீண்டும் தோன்றுகிறார்கள்; உண்மையில் அவர்கள் ஒருபோதும் இறப்பதில்லை. இறந்துவிட்ட பற்பல பக்தர்களை மீண்டும் நான் பார்த்துள்ளேன். இதனால்தான் நான் துக்கப்படுவதில்லை. நீங்கள் இறைவனை அறியும்பொழுது, அவன் உங்களுக்கு எல்லாவற்றையும் காட்டுவான் மற்றும் நீங்கள் எவரையும் இழப்பதில்லை. சில சமயம் ஒருவரது சூட்சும வடிவம் உங்களுக்குப் பக்கத்திலேயே அமர்ந்திருக்கும். நீங்கள் அவரைப் பார்க்க முடியாது. ஏனெனில் நீங்கள் இவ்விரு ஸ்தூல கண்களால் ஒரு சூட்சுமவாசியைக் காணமுடியாது. ஆனால் என்னால் அவரைக் காணமுடியும். ஆன்மாக்களை அவர்களினுடைய சூட்சும வடிவங்களில் காண்பதற்கு ஆன்மீகக் கண்ணாகிய மூன்றாவது கண்ணின் ‘எக்ஸ்ரே பார்வை’ உங்களுக்குத் தேவை. நீங்கள் அந்த ஆன்மீகக் கண்ணை மேம்படுத்த வேண்டும்.”

அவர் கூறுகிறார்: ”நீங்கள் இங்கே பூமியில் ஒரு கனவில் வாழ்ந்து கொண்டிருகிறீர்கள். இது இறைவனுடைய உலகம். நீங்கள் இறைவனுடன் ஒன்றாகும்பொழுதுதான் அது உங்களுடையதாகும். தனது முதலாளியின் வீட்டில் வசித்துக்கொண்டு குழந்தைகளைக் கவனித்துக் கொண்டு ஒரு பணிப்பெண் போன்று இருங்கள். அவள் நினைக்கிறாள். “ இது என்னுடைய வீடு, இது என்னுடைய குடும்பம், “ ஆனால் உள்ளூர அவள் அறிவாள். அது அவ்வாறல்ல என்பதை. ஏனெனில் அவளது உண்மையான குடும்பம் மற்றொரு நகரில் உள்ளது. இந்த உலகில் நீங்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் உங்களுக்கு உள்ளன. ஆனால் அது உங்களுடைய நிரந்தரவீடு இல்லை. இறந்த பின் நீங்கள் ஓர் அமெரிக்கராகவோ அல்லது ஓர் இந்தியராகவோ அல்லது ஓர் ஆங்கிலேயராகவோ இனி இருப்பதில்லை. “இறைவா, இது உனது உலகம், நான் இதனுடன் பற்றுகொண்டிருக்கவில்லை. நான் இந்த உடலுடனோ அல்லது என்னுடைய மற்ற பிறவிகளுடனோ பற்று கொண்டிருக்க விரும்பவில்லை. நான் முதலில் உன்னையும், இங்கு நான் ஏன் அனுப்பப்பட்டுள்ளேன் என்பதையும் அறிய விரும்புகிறேன். மேலும் இப்பொழுதே நான் கர்மவினையிலிருந்து விடுபடவிரும்புகிறேன். உன்னுடைய சாயலில் படைக்கப்பட்டுள்ளதால், நான் இந்த உலகத்தாலோ அல்லது இந்த தேகத்தாலோ பாதிக்கப்படவில்லை. நீர் உமது பிரபஞ்ச பணியுடன் உம்மை அடையாளப்படுத்திக்கொள்ளாததுபோன்று, நான் எனது கடமைகளை, அவற்றுடன் அடையாளப்படுத்திக்கொள்ளாது நிறைவேற்றுவேன். நான் சுதந்திரமானவன்” என்ற உணர்வுடன் வாழுங்கள்” என்கிறார் குருதேவர்.

மரணத்தை நினைத்து பயப்பட வேண்டிய அவசியமே இல்லை என குருதேவர் அவருடைய போதனைகளில் கூறியுள்ளார் அல்லவா! அதற்கான எனக்குத் தெரிந்த ஒரு நிகழ்வினை உதாரணமாகக் கூற விழைகின்றேன்.

விழுப்புரம் மாவட்டத்தில் திருக்கோயிலூர் என்ற ஊரில் தபோவனம் என்ற ஓர் இடம் உள்ளது. அங்கே ‘ஞானானந்தர்’ என்ற ஸ்வாமியின் சமாதி உள்ளது. பக்கத்தில் உலகளந்த பெருமாள் கோவிலும் உள்ளது. ஞானானந்த ஸ்வாமிக்கு பன்னிரண்டு வயதுள்ளபோது நிகழ்ந்த ஒரு நிகழ்வினை சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு மாத இதழில் வெளியானதை நான் படிக்க நேர்ந்தது. அதை நான் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளேன்.

மேலே கூறப்பட்டுள்ள ஞானானந்த ஸ்வாமிக்கு பன்னிரெண்டு வயதுள்ள போது

அம்மை போட்டு அவர் படுக்கையிலிருந்தார். திடீரென்று அவருக்கு மூச்சு நின்றுவிட்டது. அப்பொழுது எங்கிருந்தோ ஒரு செய்தி தந்திமூலமாக வந்தது. செய்தி என்னவென்றால், " மூன்று நாட்களுக்கு அவருடைய உடலை பத்திரமாக வைத்துக்கொள்ளவேண்டும். அவருடைய சரீரத்தை ஒன்றும் செய்யக்கூடாது" என்று எழுதியிருந்தது. அதேபோல் உடனிருந்த உறவினர்கள் அவருடைய உடலை பாதுகாத்து வைத்துள்ளனர். மூன்றாவது நாள் திடீரென அவருடைய கால்பெருவிரல் அசைந்தது. பிறகு மெல்ல கண்விழித்தார். பின்னர் சாப்பிட கஞ்சி கொடுத்தனர்; சாப்பிட்டார். பின்னர் பேசினார். அப்பொழுது, "மூன்று நாட்கள் நீங்கள் உயிரற்ற நிலையில் இருந்தீர்களே! நீங்கள் மூன்று நாட்களும் எங்கே போனீர்கள்; சொல்ல முடியுமா? என்று கேட்டனர்.

"நான் என்னுடைய உடலைவிட்டு வெளியேறினேன். அப்பொழுது நான் வேறு எங்கேயும் போகவில்லை; இங்கேதான் இருந்தேன். உடலை விட்டு வெளியேறியதும் நான் மிகுந்த பேரானந்தத்துடன் இருந்தேன், மீண்டும் என் உடலினுள் நான் புக நேர்ந்தது, என்று மிக்க மகிழ்ச்சியுடன் கூறினார். இதை அந்த இதழில் குறிப்பிட்டிருந்தது.

பாருங்கள்! இதிலிருந்து அவர் கூறியதை வைத்துப்பார்க்கும்பொழுது 'நான்' என்பது ஆன்மாதான்: உடல் அல்ல என்பது நன்கு தெளிவாகத் தெரிகிறது. அவர் தன்னுடைய உடலை விட்டதும் பேரானந்தத்தை உணர்ந்தார். அந்தப் பேரானந்தத்தை உணர்வதற்கும் அனுபவிப்பதற்கும்தான் அவருடைய ஆத்மாவை அவரது உடலிலிருந்து இறைவன் வெளியேறச் செய்தார் என்பது தெரியவருகிறது. இதைத்தான் விரிவாக நமது அன்பிற்குரிய குருதேவர் பலமுறை கூறியிருக்கிறார். ஆன்மா உடலை விட்டு வெளியேறினால் அது மரணமல்ல என்பதை ஞானானந்த ஸ்வாமியும் நிரூபித்துள்ளார்.

எனவே மரணத்தை எண்ணி யாரும் வருத்தப்படவேண்டாம் 'மரணம்' என்பது உறக்கம்தான்' என்று குருதேவர் கூறியுள்ளதை நினைவில்கொண்டு மகிழுங்கள், உண்மையிலேயே ஞானானந்தருடைய இந்தச் செய்தியைப்படித்ததும் நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். எனக்கும் இது போன்று நிகழவேண்டும் என்று அந்த மகிழ்ச்சியில் இறைவனிடம் கேட்டுக்கொண்டேன்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

# நொய்டா மற்றும் தில்லியில் சிறப்பாக நடைபெற்ற கும்பாபிஷேகம்






## நொய்டா சங்கர மடம்

காஞ்சி ஆச்சாரியார், ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அனுக்கிரகத்துடன், ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியார் கோயிலின் ஜீர்ணோதரன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் ஏப்ரல் 15, 2022 அன்று சிறப்பாக நடைபெற்றது, ஏ52, செக்டார்420, நொய்டாவில் இக்கோவில் அமைந்துள்ளது.

நொய்டா சங்கர மடம், ஸ்ரீஆதி சங்கராச்சாரியார் கோவில் 68 வது பீடாதிபதி பரமாச்சார்யார் பூஜ்யஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள், 69 வது பீடாதிபதி பூஜ்ய ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் மற்றும் 70 வது பீடாதிபதி பூஜ்யஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் ஆகியோரின் ஆசீர்வாதத்துடன் பல்வேறு ஆன்மிக விழாக்களும், நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகிறது.



எஸ்.வெங்கடேசன்

நொய்டா சங்கர மடத்தில் உள்ள ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியார் ஆலயம் ஆகஸ்ட் 2021 முதல் அத்தியாவசியமான பழுது மற்றும் சீரமைப்புப் பணிகள் நடைபெற்றது.

நொய்டாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீ வரத விநாயகர் கோயில், டெல்லி

ஸ்ரீ வரத கணேஷ் மந்திரின் மகா கும்பாபிஷேகம், ஞாயிற்றுக்கிழமை, 27 மார்ச் 2022 அன்று, டாக்டர் விதாயநாத சிவாச்சாரியார் மற்றும் கோயில் சிவாச்சாரியார் ஸ்ரீ முத்துக்குமரன் ஆகியோரால் நடத்தப்பட்டது. இக்கோயிலின் மூலவர் ஸ்ரீ வரத கணேசர். மேலும், அகஸ்தீஸ்வரர், துர்கா பரமேஸ்வரி, பாலசுப்ரமணியர், அனுமன் மற்றும் நவக்கிரகங்கள் உள்ளன.

சாஸ்திரங்களின்படி 12 ஆண்டுகளுக்கு ஒருமுறைசெய்யப்படும் ஜீர்ணோத்ரரண மகா கும்பாபிஷேகம் 27 மார்ச் 2022 அன்று (தொற்றுநோய் காரண மாக






தாமதமானது) நடை பெற்றது. அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, புண்யாக வச்சனத்துடன் துவங்கிய மூன்று நாள் விழாவில், ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், நவ கிரக ஹோமம், ஸ்ரீ லட்சுமி ஹோமம், பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாதம் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

மாலையில் வாஸ்து சாந்தி, மிருதசங்கிர ஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷா பந்தனம், காலா கர்ஷணம், 1ம் கால யாக சால பூஜை, திரவியாஹுதி, பூர்ணாஹுதி, தீபாராதனை ஆகிய பூஜைகள் நடைபெற்றன.

மகா கும்பாபிஷேக நாளான மார்ச் 27ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை விக்னேஷ்வர பூஜை, கௌபூஜை, கஜ பூஜை, அஸ்வ பூஜை 4ம் கால யாக சால பூஜை, திரவியஹுதி மற்றும் நாடி சந்தானம், ஸ்பர்ஷாஹுதி, மகா பூர்ணாஹுதி, தீபாராதனையுடன் தொடங்கியது. ராஜகோபுர மகா கும்பாபிஷேகம், ஸ்ரீ வரத கணேசர் விமான மகா கும்பாபிஷேகம், மூலவர் ஸ்ரீ வரத கணேசர் மகா கும்பாபிஷேகம், பரிவார தேவதைகள் மகா கும்பாபிஷேகம், மகா தீபாராதனை, யஜமான உற்சவம், அன்னதானத்துடன் நிறைவு பெற்றது.

ஸ்ரீ கணேஷ் மந்திர் அசோசியேஷன், ரெஜிடி யால் நிர்வகிக்கப்படும் ஸ்ரீ வரதா விநாயகர் கோயில், டெல்லியின் தில்ஷாத் கார்டனில்உள்ள தாஹிர்பூரில் அமைந்துள்ளது, இது தென்னிந்திய கோயில் கட்டிடக்கலை முறையில் ஏப்ரல் 2008 இல் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இக்கோயிலில் ஸ்ரீ வரத கணேசர் மூலவராக இருக்கிறார்.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா,
போன்: 9811161370


● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்



எங்கள் சேவைக்கு உங்களின் உதவி தேவை

# விருப்ப சந்தா




தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் **ரூ.10** முதல் தங்கள் வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.

## சந்தா அனுப்புபவர்கள், கீழ்காணும் ஸ்கேனர் மற்றும் வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM
Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI
Paytm | Baroda Pay | BHIM | BharatPe

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

# கனவில் வந்து தட்டியெழுப்பி குறைகளை போக்கும் துர்க்கை




வெற்றிகளை அள்ளித் தரும் துர்காதேவி கொற்றவையின் அம்சம். சிவனுக்கு உகந்த இந்த துர்க்கை எல்லா சிவாலயங்களிலும் சிவனுக்கு இடப்புறம் தனக்கென்று ஓர் இடம் பிடித்து, வடக்கே முகம் காட்டி, அருள் மழை பொழிபவள்.

அந்தவகையில் புதுச்சேரி மாநிலம், நெட்டப் பாக்கம் கொம்யூன் பஞ்சாயத்திலுள்ள மடுகரை என்ற கிராமத்தில் தனியே கோவில் கொண்டு தன்னாட்சி நடத்துகின்றார் ஸ்ரீதுர்கை.

வித்தியாசமாக இத்தலத்தில் இவள் கிழக்கே திருமுகம் காட்டி, எழுந்துள்ளாள். எட்டு கரங்கள் கொண்டு, சிம்மத்தின் மீது வீற்றிருந்து, பக்தர்களைக் காக்கும் காவல் தெய்வமாய் காட்சியளிக்கின்றாள்.

இந்த துர்க்கை கோவில் கொண்ட நாள் முதல் பக்தர்களது கனவில் வந்து, அவர்களிடம் பேசி, அவர்களின் குறைகளைக் களைவது






வழக்கம். அப்படி ஒரு நாள் இரவு தனது கோவிலுக்கு அருகே இருந்த 'இருசப்பன்' என்ற பக்தனை தட்டி எழுப்பி, தனது சூலாயுதத்தை திரு டன் ஒருவன் திருடிக்கொண்டு ஏரிக்கரை மீது செல்வதாக செய்தி சொன்னாள்.

உடனே ஊரார் துணையோடு ஓடிச்சென்ற இருசப்பன், சூலத்தை மீட்டு வந்தான். இப்போது அந்த சூலாயுதம் சுதை வடிவ துர்க்கையின் கரத்தில் தவழ்கிறது.

இதுபோன்ற அற்புத சம்பவங்கள் இங்கு நித்தமும் நடத்தப்பட்டுக் கொண் டிருக்கின்றன, ஸ்ரீ துர்காதேவியின் திருவருளால்... வெள்ளி, செவ்வாய் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இவ்வன்னைக்கு விளக்கேற்றி, குங்குமத்தால் அர்ச்சனை செய்தால் குறைகளைக் களைந்து, அன்பர்வாழ்வில் குதூகலத்தை ஏற்படுத்துகின்றாள்.

அதோடு, இங்கு தனியே சனீஸ்வர பகவான் எழுந்தருளி அனுக்கிரகம் செய்வதால், இவர் அனுக்கிரக சனி என போற்றப்படுகின்றார். எங் குமே காணக் கிடைக்காத வட்ட வடிவ அமைப்பில் நவக்கிரகங்களை இங்கு தரிசிக்கலாம். ஒவ்வொரு மாதமும் அமாவாசை, பௌர்ணமி நாட்களில் சிறப்புஅபி ஷேக அலங்காரமும், அன்னதான மும் நடைபெறுகின்றன.

நவராத்திரியின் போது ஒன்பது நாட்களும் இங்கு மிகவும் கோலா கலமாக இருக்கும். நிவேதன பிரசாதத்தோடு, குங்குமமும் இங்கு வரும் சுமங்கலிப்பெண்களுக்கு வழங்கப்படுகின்றன.

ஒன்பது நாளும் ஒன்பது வகை யான அலங் காரத்தில் அன்னை அஷ்டபுஜ துர்க்கை இங்கே அழ காய் திகழ்கின்றாள்.

பக்தர்களிடம் நேரில் பேசும் இந்த எடுக்கர துர்க்கையை வழிபட, திருமணத்தடை நீங்கும். பிள்ளைவரம் கிட்டும். வழக்குகள் வெற்றியாகும். எதிலும் வெற்றி உண்டாகும். வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அருளும் இந்த அஷ்டபுஜ துர்கையை வணங்கி, வாழ்க்கை யின் இன்னல்கள் யாவும் களைவோம். இன்புற்று வாழ்வோம்.

விழுப்புரம் புதுச்சேரி செல்லும் பேருந்துகளில் மடுகரை வரலாம். நெடுஞ்சாலையை ஒட்டி இவ்வாலயம் அமைந்துள்ளதால் இங்கு வருவது மிகவும் சுலபம்.











மோ.கணேஷ்

– ஜோதிட கலாநிதி பழங்காமூர்
மோ.கணேஷ் குருக்கள், ஆரணி.
தொடர்புக்கு: 9789156179

# தனிமனித சுதந்திரத்தை கட்டுப்படுத்துவது மன்னிக்க முடியாத பாபமாகும்

நாம் சந்தேகம் என்ற உணர்வைக் கொள்ளவே கூடாது. இந்த உணர்வு நல்ல மனிதனையும் கெட்ட மனிதனாகக் காட்டி விடும். இது மனிதன் செய்கின்ற தவறு. உலகில் ஒவ்வொரு சமயமும் சிந்தித்தே செயல்படு!

❖❖❖

தயவு செய்து ஒருபோதும் நேர்மையான மனிதர்களை சந்தேகப்பட்டு விடாதே. சிந்தனையின் வழித்துறையே உனக்கு சிந்திக்கின்ற வழியைக் காட்டும்.

❖❖❖

உலகில் ஒரு அதிசயம் நடந்து கொண்டிருக்கிறது. எல்லா மிருகங்களும் பறவைகளும் மனித சமுதாயத்தைப் பார்த்து சந்தேகப்படுகின்றன. ஏன்? நாம் ஊறு செய்துவிடுவோம் என்ற கருத்தே அவைகளிடம் உள்ளன. இது தான் ஆண்டவன் உயிர்களின் பரிணாம வளர்ச்சியில் மனித சமுதாயத்திற்கு வைத்த பெரிய சாபம்.

❖❖❖

கடவுளால் அகில உலகிற்கு வழங்கப்பட்டதே சுதந்திரம் என்ற தன்மை. மனம் வாக்கு காயம் இம்மூவுணர்வினாலும் சுதந்திரத்தோடு பிறப்பது என்பதே மனிதனின் உரிமை.

❖❖❖

ஒரு நாட்டில் சுதந்திரத்தை உருவாக்க விரும்புகின்றவர்கள் பறவைகளின் சுதந்திரத்தை உதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும். எந்த ஒரு தனிமனிதனின் சுதந்திரத்தையும் கட்டுப்படுத்தி விடுவது என்பது ஒரு மன்னிக்க முடியாத ஒரு பாபமாகும்.



❖❖❖

ஒரு நாட்டின் பிரஜையினுடைய முழுமையான உரிமை என்பதே சுதந்திரமாகும். மனிதர்கள் பெரும்பாலும் சுதந்திர உணர்வையே நேசிக்கிறார்கள். அத்தன்மைக்கு நீதி வழங்குகிறார்கள்.

❖❖❖

ஒரு நாட்டில் முழு சுதந்திரம் இருந்தால் அதை தயவு செய்து மக்கள் தவறாக பயன்படுத்தவே கூடாது. அப்படிச் செய்யின் அது ஒரு பெரிய பாபம். மன்னிக்க முடியாத குற்றமும் கூட.

❖❖❖

பாவமான வழிகளை பின்பற்றி சிலர் சுதந்திரத்திற்காக பாடுபடுவார்கள். அது ஒரு வகையான வழி. இவ்விடத்தில் நான் குறிப்பிடுவது என்ன கருத்து என்றால் எந்த முயற்சியிலும் நாம் பாவம் உருவாகும்படியாக நடந்து கொள்ளவே கூடாது. குறிப்பாகச் சொல்லப் போனால் போராடுவது என்பது செயல். கத்தி கொண்டு போராடுவது என்பது ஒரு பாபமே. இப்படி செய்யாமல் அஹிம்சை முறையில் இந்தியா போராடி சுதந்திரத்தைப் பெற்று விட்டது.

❖❖❖

பாபத்தை கொண்டுள்ள செயல்கள் அனைத்தும் பாப எண்ணம் கொண்ட மக்களின் செயல்களே. இந்த கருத்துக் குவியல்களில் சுதந்திர உணர்வு என்பது பாபமில்லா இறைவனின் செயலாகும்.

❖❖❖

அரசன் என்று முடிசூடிவிட்டாலும் பிறரை ஆளுகின்றவன் என்று சட்டப் பொறுப்பாளனாக இருந்தாலும்



ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
**செல்: 9444228203**

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**

அவனால் முழுச்சுதந்திர உணர்வோடு சில சமயங்களில் தான் சிந்தனை செய்ய முடியும். எப்பொழுதும் சிந்தனை செய்ய முடியாது. நீ வாழ்வதாய் இருந்தால் எப்பொழுதும் சுதந்திர சிந்தனையோடு வாழ்.

❖❖❖

இயற்கையை நேசிக்கின்ற மனிதன் சுதந்திரத்தை விரும்பு கின்ற மனிதனாவான். இயற்கைகளின் வளர்ச்சியில் சுதந்திர உணர்வு கடவுளின் செயலாக திகழ்கிறது.

❖❖❖

உலகிலுள்ள சுதந்திரத்தை நேசிக்கின்ற நாடுகளெல்லாம் அவர்களுடைய பிரஜைகளுக்கு முழுமையான சுதந்திரத்தை வழங்க வேண்டும். ஆனால் அதில் அராஜகத்தை செய்ய அவர்களுக்கு எண்ணத்தை கொடுக்கக்கூடாது. சுதந்திர நாட்டில் பாபத்தை உணரும்படியான மக்கள் இருத்தல் வேண்டும். இப்படிப்பட்ட நாடுகள் எல்லாம் இயற்கைக்கு பரிசாய் இருக்கின்ற ஒரு பூச்செண்டே ஆகும்.

❖❖❖

நீ எப்படி சுதந்திரம் என்ற வார்த்தையை வேறு ஒரு இணை வார்த்தையை வைத்து பொருள் சொல்லுவாய்? நான் சொல்லுகிறேன் கேள். ஒவ்வொரு மனிதனும் பிராணவாயுவை மூச்சாக விட்டு வாழுகிறான். சுவாசிப்பதே சுதந்திரத்திற்கு உதாரணம்.

ஆன்மிகமலர்

❖❖❖

சிந்தனை செய்யும்பொழுது மனிதனால் சந்தேகப்பட முடியாது. சிலர் சந்தேகக் கண் கொண்டு பார்க்கிறார்கள் என்றாலே அவர்கள் சிந்தனை செய்யவில்லை என்று பொருள். சந்தேகப்படுவது பொருளில்லாமல் பிறக்கக் கூடாது, ஒரு பொருளை ஆராய்ச்சி செய்வது என்பதே அப்பொருளைப் பற்றிய மறைமுகமான சந்தேகம் என்றே பொருள். இதை நீ தெரிந்து கொள்ள வேண்டும். ஆயினும் சிலர் சந்தேகப்படுகிறார்கள் என்றால் என்ன அர்த்தம்? சந் தேகம் என்ற ஒரு முயற்சியே சிறிது தித்திப்புள்ள செய்கை தான் இது. யாருக்கு தெரியுமா? மனிதனின் மூளைக்கு.

❖❖❖

உண்மையாக சந்தேகப்படுவது என்பது ஒரு குற்றமில்லாத ஆராய்ச்சி முறையாகும். மூளை உள்ளவர்களும் தெளிவுள்ள மனிதர்களும் இதை செய்கிறார்கள்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# பிரம்ம முகூர்த்த நேரத்திற்கு இணையான

## ராஜயோக பலன்தரும்

# சந்தியா காலநேரம்

பிரம்ம முகூர்த்தம் என்பது அதிகாலை 4.30 மணி முதல் 6 மணி வரை உள்ள நேரம் பிரம் முகூர்த்த நேரமாகும், இரவில் உறங்கும் உயிர்கள், மீண்டும் மறுநாள் கண்விழித்து எழுவது என்பதே ஒரு மறுபிறவி போன்றதுதான். அதுவும் ஒரு உயிர் படைப்பு போன்றதுதான். அதனால்தான் ஒவ்வொரு நாளும் இப்பொழுதை பிரம்மனுக்கு உரியதாக குறிப்பிட்டுள்ளனர் நமது முன்னோர்கள்.

பிரம்ம முகூர்த்த நேரத்தில் எழுந்திருக்கும் போது சில நன்மைகள் உண்டு. பிரம்மனுடைய மனைவி சரஸ்வதி தேவி விழித்துச் செயற்படும் நேரம் பிரம்மமுகூர்த்தம் என்பதும் நம்பிக்கை. இந்த நேரத்தில் செய்யும் வழிபாடு பலமடங்கு புண்ணியத்தை தரும்.

இந்தப் பொழுதில் சூரியனிடம் இருந்து பூமியை வந்தடையும் ஒளிக்கதிர்கள் சக்தி வாய்ந்தவை. இவை நம் உடலில் படும்போது நரம்புகளுக்கு புத்துயிர் கிடைக்கின்றது. உற்சாகத்தையும், சுறுசுறுப்பையும் வழங்குகின்றது. கண்கள் ஆரோக்கியத்தையும், உடல் வலிமையும் பெறுகின்றன.

இந்த நேரத்தில் இறைவனிடம் வைக்கின்ற அனைத்துவித பிரார்த்தனைகள் கண் கூடாகவே நிறைவேறும்.

உஷஸ் என்னும் பெண் தேவதையைப் பற்றி ரிக் வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது.

இந்த தேவதை தோன்றிய பின்பே சூரியன் உதயமாகிறானாம். அதனால்தான் அதிகாலையை ‘உஷத் காலம்’ என்கிறார்கள். இந்த தேவதையின் செழிப்பான கிரணங்கள் அதிகாலையில் பூமியை நோக்கி பாய்வதால், அந்த வேளையில் நீரில் மூழ்கி நீராடுவது விசேஷமான பலனைத் தரும்.

பிரம்ம முகூர்த்தத்தில் திதி, வார, நட்சத்திர, யோக தோஷங்கள் கிடையாது. இந்த நேரம் எப்போதுமே சுபவேளை தான் இந்நேரத்தில் எழுந்து குளித்து இறைவழிபாட்டைச் செய்து நமது வேலையை செய்யத் தொடங்கினால் அன்று முழுவதும் வெற்றிதான். பிரம்ம முகூர்த்தத்தில் வீட்டில் விளக்கேற்றி வழிபடுவதன் மூலம் சகல சவுபாக்கியங்களும் பெறலாம் என்பது ஐதீகம்.

தெய்வீகத்தன்மை இருக்கக்கூடிய நேரம், பிரம்ம முகூர்த்தம். அந்த நேரத்தில் எழுந்து, உங்கள் பணிகளைத் தொடங்கினால், வாழ்வில் மாற்றத்தை சந்திக்கலாம். நினைத்த காரியங்கள் நிறைவேறும். லட்சுமி கடாட்சம் இல்லத்தில் குடியேறும்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்த பிரம்ம முகூர்த்த நேரத்தை அனைவராலும் கடைபிடிக்க முடியாத காலகட்டத்தில் நாம் வாழ்க்கை முறை தற்போது மாறியுள்ளது.

இந்த நேரத்தில் விளக்கேற்றி இறைவனை வழிபடமுடியாத சூழ்நிலை ஏற்படுவதை தடுக்க எளிமையான இன்னொரு வழிமுறையை நமது முன்னோர்கள் கூறியுள்ளனர். பிரம்ம முகூர்த்த நேரத்திற்கு இணையாக இருப்பது சூரியன் மறையும் நேரமாக இருக்கும். இதை சந்தியா காலம் என்று கூறுவார்கள். கிட்டத்தட்ட சந்தியா காலமும், பிரம்ம முகூர்த்தத்துக்கு இணையானது தான். சந்தியா காலம் என்பது மாலை வேளையில்

மூன்றில் இருந்து ஆறு மணி வரை கொண்ட காலம் ஆகும். இதில் இறுதியாக இருக்கும் ஒரு மணி நேரம் மிகவும் விசேஷமானது.

மாலையில் தினமும் 5 லிருந்து 6 மணிக்குள்ளாக விளக்கேற்றுவது சாஸ்திர நியதி. வெள்ளிக் கிழமைகளில் 6 மணிக்கு மேல் தான் சிலர் விளக்கு ஏற்றுவார்கள். இப்படி செய்வதை விட 6 மணிக்குள்ளாகவே நாம் விளக்கு ஏற்றி விடுவது மிக மிக நல்லது. ஐந்திலிருந்து ஆறு மணிக்குள் தினமும் பூஜை அறையில் 3 விளக்குகளை வைத்து வழிபடுவது ராஜ யோகத்தைக் கொடுக்கும்.

சந்தியா கால நேரத்தில் வீட்டில் விளக்கு எரிந்து கொண் டிருந்தால் அத்தனை தெய்வங்களின் ஆசீர்வாதமும் கிடைக் கும்.

தினமும் மாலை வேளையில் ஐந்திலிருந்து இறை வழிபாடுகளில் ஈடுபட்டு வந்தால் குடும்பத்தில் உள்ள அத்தனை கஷ்டங்களும் நீங்கி நல்ல விஷயங்கள் நடக்க துவங்கும். நீங்கள் செய்ய செய்ய உங்களுக்கு அவற்றின் மகத்துவத்தை உணர கூடிய வாய்ப்புகள் உண்டாகும். இப்படி சந்தியா கால வேளையில் ஏற்றும் விளக்கானது மஞ்சள் திரியை கொண்டு ஏற்றுவது மிக மிக நல்ல பலன்களைக் கொடுக்க வல்லது.

ஒவ்வொரு பிரார்த்தனைக்கும் ஒவ்வொரு நிறத்தில் திரியை ஏற்றுவது வழக்கம்.

மஞ்சள் நிற திரியானது துன்பங்களைப் போக்க கூடிய ஆற்றல் கொண்டுள்ளது.

சாதாரண திரியில் மஞ்சள் தோய்த்து காய வைத்து பின்னர் பயன்படுத்தினால் கஷ்டங்கள் நீங்கும் என்பது ஐதீகம்.

பிரம்ம முகூர்த்த நேரத்தில் எழுபவர்கள் 5 விளக் கில் இது போல் மஞ்சள் திரியை கொண்டு தீபம் ஏற்றினால் நல்ல பலன்கள் கிடைக்கும். இந்த இரண்டு வேளைகளும் இறை வழிபாட்டிற்குரிய மிக மிக விசேஷமான காலம் ஆகும்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182





அழகுராஜா

# வைகாசிமாத சிறப்புகள்

உத்தராயண காலத்தின் ஐந்தாவது மாதம் வைகாசி மாதம். இளவேனில் எனும் வசந்த காலம் இது. வைகாசி மாதத்தை மாதவ மாதம் என்பர். வைகாசி மாதத்துக்கு மட்டுமே இந்தச் சிறப்பு உண்டு.வளம் தரும் வைகாசி மாதத்தை 'மாதவ மாதம்' என்றும் வைகாசம் என்று போற்றுவர். வைகாசி முதல் தேதியில் கங்கை நதியில் நீராடினால் ஏழேழு ஜென்மங்களில் செய்த பாபங்கள் நீங்கும் என்று சாஸ்திரம் கூறுகிறது. வைகாசி என்பதை விசாகம் என்றும் சொல்வர்.

விசாகம் என்றால் " மலர்ச்சி' என்று பொருள். வைகாசிதான் சமஸ்கிருதத்தில் வை சாகம் ஆனது. இம்மாதத்தில் புனித நதியில் நீராடி மஹாவிஷ்ணுவை துளசி இலைகளால் பூஜை செய்தால் நற்பேறுகள் பல பெறலாம் என்று விஷ்ணு புராணம் கூறுகிறது.

- மேலும் வைகாசி மாதத்தில் பல அவதாரங்கள் நிகழ்ந்ததாகப் புராணங் கள் கூறுகின்றன. வைகாசி பௌர்ணமி அன்று சிவபெருமானின் நெற்றியிலிருந்து வெளிப்பட்ட தீப்பொறியானது ஆறு குழந்தைகளாக சரவணப்பொய்கையில் தோன்றியது.
- வைகாசி சுக்ல சதுர்த்தசியில்தான் மஹா விஷ்ணு தன் பக்தன் பிரகலாதனுக்காக ஒரு நொடிப்பொழுதில் நரசிம்ம அவதாரம் எடுத்தார்.
- கௌதம புத்தர் அவதரித்தது ஓர் வைகாசி பௌர்ணமி என்று வரலாறு சொல்கிறது. அவர், கயாவில் போதி மரத்தடியில் ஞானம் பெற்றதும் வைகாசி பௌர்ணமியே ஆகும்.
- வைகாசி மாத மூலநட்சத்திர நாள் திருஞானசம்பந்தரின் திருநட்சத்திர தினம். அன்று ஆச்சாள் புரத்தில் திருஞானசம்பந்தர் விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.
- நம்மாழ்வார், திருக்கோட்டியூர் நம்பிகள் அவதரித்த மாதம் வைகாசி.
- காஞ்சி மகாபெரியவர் அவதரித்ததும் வைகாசி பௌர்ணமியே. ஆதிசங்கரர் தோன்றியது வைகாசி பஞ்சமி.
- வைகாசி பௌர்ணமியன்று சிவபெரு மானுக்கு மகிழம்பூ நிறத்தில் பட்டாடை சாற்றி, 108 பத்ம ராகக் கற்களாலான மாலை அணிவித்து, எள்சாதம் நிவே தனம் செய்து வழிபட்டால் தெரிந்தோ தெரியாமலோ செய்த பாபங்கள் நீங்கும் என்று சாஸ்திரம் கூறுகிறது.
- வைகாசி மாதம் சிவபெருமானை போற்றி கடைப்பிடிக்கப்படும் விரதம் ரிஷப விரதம் ஆகும்.
- வைகாசி விசாகத்தில் எமதர்மராஜன் அவதரித்ததாக புராணம் கூறுகிறது. ஆகையால் எமதர்மராஜன் எழுந்தருளி யுள்ள ஸ்ரீ வாஞ்சியம் மற்றும் திருச்சி மண்ணச்சநல்லூர் அருகேயுள்ள திருப் பைஞ்ஞீலி திருத்தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும்.
- தமிழ் கடவுள் முருகன் வைகாசி மாதம் விசாகம் நட்சத்திரத்தில் பிறந்தார்.



# திருவண்ணாமலை கிரிவலமும்

## முதன் முதலில் கிரிவலம் சென்ற வரலாறும்

ஜோதியாகத் தோன்றி பிறகு மலையாக அமர்ந்த அண்ணாமலையாரே திருவண்ணாமலையில் கிரிவலத்தைத் தொடங்கி வைத்தார். அவர் நடத்திய திருவிளையாடல்தான் கிரிவலம் தோன்றக் காரணமாக அமைந்தது.

அந்த திருவிளையாடலால் திருவண்ணா மலையில் முதன் முதலில் கிரிவலம் சென்றது பார்வதிதேவி ஆவார். இதன் பின்னணியில் அமைந்த புராண வரலாறு வருமாறு:

ஒரு தடவை கைலாயத்தில் சிவ பெருமானின் இரு கண்களையும் பார்வதி தேவி மூடியதால் உலகம் இருண்டு உயிரினங்கள் அனைத்தும் தவிக்க நேரிட்டது. இதனால் பார்வதி தேவிக்கு தோஷம் ஏற்பட்டது.

அந்த தோஷத்திற்குப் பரிகாரம் தேட வேண்டிய நிலை ஏற்பட்டதால் பார்வதி தேவி திருவண்ணாமலைக்கு வந்து தவம் இருந்தார்.

அவர் தவத்தைக் கண்டு மனம் இறங்கிய சிவபெருமான் அவருக்குக் காட்சி கொடுத் தார். வேண்டிய வரம் கேள் என்றார்.

அதற்கு பார்வதிதேவி உங்களை என்றென்றும் பிரியாது இருக்கும்படி உங்கள் உடலில் பாதி யை தந்து அருள வேண்டும் என்றார்.

உடனே சிவபெருமான் அப்படி யானால் நீ என்னைச் சுற்றி வர வேண்டும் என்று கூறினார். அதை ஏற்றுக்கொண்ட பார்வதி தேவி திரு வண்ணாமலையில் ஈசனே மலையாக வீற்றிருப்பதால் அந்த மலையைச் சுற்றத் தொடங்கினார்.

மலையை வலம் வருதல் என்பது சிவபெரு மானையே சுற்றி வருவதற்குச் சமமா கும் என் பதை உணர்ந்ததால் அவர் தன் தலை மீது கை கூப்பியபடி வலம் வந்தார்.

அவருக்குச் சிவபெருமான் கிரிவலப் பாதை யில் நேர் அண்ணாமலை அருகே ரிஷப வாகனத்திலும், ஈசான்ய பகுதியில் ஒளி ரூபத்திலும் இரண்டு இடங்களில் காட்சி கொடுத்து ஆசீர்வதித்தார். பின்னர் தனது உடலின் இடபாகத்தை வழங்கி தன்னோடு ஐக்கியமாக்கிக் கொண்டு அர்த்தநாரீஸ்வரராகக் காட்சி கொடுத்தார்.

அப்போது பார்வதிதேவி, "நான் தங்களை சுற்றி வந்ததால் என்னை ஆசீர்வதித்ததை போலத் திருவண்ணாமலை மலையைக் கிரிவலம் வரும் ஒவ்வொரு பக்தனுக்கும் அருள் வழங்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

அதற்குச் சிவபெருமான் சம்மதித்தார். இந்த முறையில்தான் திருவண்ணாமலையில் கிரிவலம் செல்லும் நடைமுறை பழக்கத்துக்கு வந்தது.




பார்வதி தேவியைத் தொடர்ந்து இதர கடவுள்கள், தேவர்கள், ரிஷிகள், சித்தர்கள், மகான்கள் என அனைத்து தரப்பினரும் திருவண்ணாமலையில் கிரிவலம் வந்து ஈசனா கிய அண்ணாமலையாரின் அருளைப் பெற் றனர்.

இதைத் தொடர்ந்து சித்தர்களின் வழிகாட் டுதலின் பேரில் சாதாரண மனிதர்களும் திருவண்ணாமலையில் கிரிவலம் செல் லும் நடைமுறை பழக்கத்துக்கு வந்தது.

# நல்லோர் நட்பை பாராட்டுங்கள்

## வசிஷ்டர் உணர்த்திய பாடம்

விஸ்வாமித்திரர் ஒரு யாகம் செய்யத் தீர்மானித்தார். அந்த யாகத்தின் முடிவில், இருப்பதையெல்லாம் தானம் கொடுத்துவிட வேண்டும் என்பது முறை. அதை அனுசரித்து விஸ்வாமித்திரர், தன்னிடம் இருந்தவற்றையெல்லாம் தானம் கொடுத்துக் கொண்டிருந்தார். அதை அறிந்த வசிஷ்டர், விஸ்வாமித்திரர் கொடுக்கும் தானத்தைத் தானும் பெறுவதற்காக வந்தார். வசிஷ்டரின் வருகையை அறிந்த விஸ்வாமித்திரர், மனம் மகிழ்ந்து வசிஷ்டருக்குத் தானம் கொடுத்தார். தானம் பெற்ற வசிஷ்டரும் அமைதியாகத் திரும்பினார்.

சில நாட்கள் ஆகின. விஸ்வாமித்திரர் செய்ததைப் போலவே தானும் ஒரு யாகம் செய்ய எண்ணினார் வசிஷ்டர். நல்லவர்களின் நல்ல தீர்மானம் அல்லவா? உடனடியாகச் செயல் பாட்டிற்கு வந்தது.

ஆம்! வசிஷ்டர் யாகம் செய்தார், யாகத்தின் முடிவில் தன்னிடம் இருந்தவற்றையெல்லாம் தானம் செய்யத் தொடங்கினார். தகவல் அறிந்த விஸ்வாமித்திரர், ‘‘வசிஷ்டர் தானம் கொடுக்கிறார் என்றால், அது விசேஷம்தான். நாமும் போய் அதைப்பெற வேண்டும்’’ என்று புறப்பட்டு வந்தார். ஆனால், விஸ்வாமித்திரர் வருவதற்குள்ளாக வசிஷ்டர், தன்னிடம் இருந்த அனைத்தையும் தானம் கொடுத்து முடித்து விட்டார். அதை அறிந்ததும் விஸ்வாமித்திரர் கொதித்தார்.


www.aanmeegamalar.com

“ஓ! வசிஷ்டரே! நீர் என்னை அவமானப்படுத்திவிட்டீர். தானம் வாங்கவந்தஎன்னை வெறுங்கையுடன் அனுப்ப எண்ணிவிட்டீர் போலிருக்கிறது” என்றார்.

அவரை அமைதிப்படுத்திய வசிஷ்டர், “விஸ்வாமித்திரரே! கோபம் வேண்டாம்! பொருட் கள் இல்லாவிட்டால் என்ன? நல்லவர்களுடன் சேர்ந்திருந்த சத்சங்க சாவகாசப்பலன் (நல்லோர் நட்பு), ஒரு நாழிகை (24 நிமிடங்கள்) என்னிடம் உள்ளது. அதில் கால் பங்கை உங்களுக்குத் தருகிறேன்” என்றார்.

அதைக்கேட்டதும் விஸ்வாமித்திரர் மேலும்

கோபப்பட்டார். அப்போதும் வசிஷ்டர் கோபப்பட வில்லை. “சரி! விஸ்வாமித்திரரே! நீங்கள் போய், உலகுக்கெல்லாம் ஒளி கொடுக்கும் சூரியனை யும், பூமியைத் தாங்கும் ஆதிசேஷனையும் நான் அழைப்பதாகச் சொல்லி அழைத்து வாருங்கள்!” என்றார். சற்று யோசித்த விஸ்வாமித்திரர், “சரி! போய்த்தான் பார்ப்போமே!” என்று எண்ணிப் புறப்பட்டார்.

போனவர், ஆதிசேஷனிடம் தகவலைச் சொல்லி அழைத்தார். ஆதிசேஷன், “சுவாமி! நான் வந்துவிட்டால், என் வேலையை யார் செய்வது?'' எனக்கேட்க, விஸ்வாமித்திரர் சூரியனிடம் போய்த் தகவலைச் சொல்லி அழைத்தார். சூரியபகவானோ, “சுவாமி! உங்களுடன் நான் வந்தால், என் வேலையை யார் செய்வார்கள்? உலகம் இருண்டுபோய்விடாதா?” எனச் சொல்லி மறுத்தார்.

விஸ்வாமித்திரர் திரும்பி வந்து,நடந்தவற்றை வசிஷ்டரிடம் சொன்னார். உடனே வசிஷ்டர், “அப்படியா? சரி! ஒரு நாழிகை சத்சங்க சாவகாசப் பலன் என்னிடம் இருப்பதாகச்சொன் னேன் அல்லவா? அதில் கால் பங்கை ஆதிசேஷ னுக்கும் கால் பங்கை சூரிய பகவானுக்கும் அளிக்கிறேன். இப்போது போய்க்கூப்பிடுங்கள்!” என்றார். விஸ்வாமித்திரரும் போய் ஆதிசேஷனிட மும் சூரிய பகவானிடமும் தகவல் சொல்லி அழைத்தார். அவர்கள் இருவரும் உடனே வந்து விட்டார்கள். “முதலில் மறுத்த நீங்கள், இப்போது வருகிறீர்களே எப்படி? இப்போது மட்டும் உங்கள் வேலையை யார் செய்வார்கள்?” எனக் கேட்டார். ‘‘வசிஷ்டர் அளித்த கால் பங்கு சத்சங்க சாவகாசப் பலன் எங்கள் வேலையைச் செய்யும்” என்று ஆதிசேஷனும் சூரியபகவானும் பதில் அளித்தார்கள்.

விஸ்வாமித்திரருக்கு அப்போது தான் உண்மை புரிந்தது. சத்சங்க சாவகாசப்பலன், அதாவது நல்லவர்களின் கூட்டுறவுசேர்க்கை எப்படிப்பட்ட சக்தி படைத்தது என்பதை உணர்ந்தார். அப் புறம் என்ன? விஸ்வாமித்திரர் பணிவோடு, வசிஷ்டரிடம் இருந்து கால் பங்கு சத்சங்க சாவகாசப் பலனைப்பெற்று மகிழ்ச்சியுடன் திரும்பினார். திரும்பிய விஸ்வாமித்திரர் தன் ஆசிரமத்தை நெருங்கும்போது, ஆசிரம வாசலில் மகாவிஷ்ணுவைப் போலத்தோற்றம் கொண்ட இருவர் இருப்பதைப் பார்த்தார்.

அவர்களை நெருங்கி விஸ்வாமித்திரர் கேட்பதற்குள், அவர்களே விஸ்வாமித்திரரை நெருங்கி வந்து, “சுவாமி! நாங்கள் பகவானின் ஏவலர்கள். பகவான் ஸ்ரீராமராக அவதாரம் செய்யப் போகிறார். அப்போது சீதாதேவிக்கும் ஸ்ரீராமருக்கும் திருமணம் செய்து வைக்கும் பாக்கியம் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. பகவான் அறிவித்து விட்டு வரச் சொன்னார். எல்லாம் சத்சங்க சாவகாசப்பலன்” என்று சொல்லிச்சென்றார்கள்.

நல்லவர்களின் தொடர்பு என்ன பலனைத் தரும் என்பதை விளக்கும் கதை இது.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

ஆன்மிகமலர்
ஆன்மிக விஷயங்களின்
முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ-டியூப் சேனலில்
பதிவிடப்பட்டுள்ளோம்.
நமது சேனலில் சென்று
முழுவதுமாக பார்த்து
பயன் பெறுங்கள்...
ஆன்மிக சேவை
செய்யும் நமது
சேனலை
Subscribe
like & share

இதுவரை
வெளிவந்த
அனைத்து
இதழ்களையும்
எந்தவித
கட்டணமின்றி
முற்றிலும்
இலவசமாக
படிக்க













aanmeegamalar.com

இணையதளத்தை

பார்க்கவும்









# இருதயநோய், மனக்கலக்கம், புத்திசுவாதீனம் இல்லாதவர்கள், வழிபட வேண்டிய கோவில்





www.aanmeegamalar.com

திருவாரூருக்கு தென்கிழக்கே 9கி.மி. தொலைவில் இத்தலம் உள்ளது. திருவாரூர் மற்றும் நாகபட்டினத்தில் இருந்து கீவளூர் வழி யாக திருத்துறைப்பூண்டி செல்லும்சாலையில் அமைந் துள்ளது அருள்மிகு மாழையொண்கண்ணி அம்மன் உடனுறை மனத்துணைநாதர் திருக் கோயில் இத்தலம் உள்ளது.

கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக்கோவில் களில் இத்தலத்து ஆலயமும் ஒன்றாகும்.

தேவாரம் ஓதுவோர் யாவரும் முதன்முதலாக ஓதும் என்ற திருப்பாட்டு திருஞானசம்பந்தரால் முதல் திருமுறையில் இத்தலத்து இறைவன் மேல் பாடப்பெற்ற பூ இயல் புரிகுழல் வரிசிலை நிகர் நுதல் என்ற பதிகத்தின் 5வது பாடலாகும். தேவாரப் பாடல்களை ஓதத் தொடங்கும்போது பொதுவாக முதலிற் பாடத் தொடங்கும் 'பிடியதன் உருஉமை கொள' என்னும் பாடல் இத்தலத்திற் குரியதே.

இருதயம் சம்பந்தப்பட்ட நோய், மனக்கலக்கம், புத்திசுவாதீனம் இல்லாதவர்கள், மன சஞ்சலம் உள்ளவர்கள் வழிபாடு செய்வது சிறந்தது.

தேவாரப்பாடல் பெற்ற காவிரி தென்கரைத் தலங்களில் இது 121வது தலம்.

தேவாரப்பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் இது 185 வது தேவாரத்தலம் ஆகும்.

இறைவர் திருப்பெயர்: இருதய கமலநாதேஸ் வரர், மனத்துணைநாதர்.

இறைவியார் திருப்பெயர்: வாளையங்கண்ணி, அங்கயற்கண்ணி.

தல மரம்: புன்னை. தீர்த்தம்: சங்கர தீர்த்தம்.

வழிபட்டோர்: சூரியன், கரிக்குருவி(வலியன்), காரணமாமுனிவர் முதலியோர்.

தேவாரப் பாடல்கள்: 1. சம்பந்தர் 1. ஒல்லையாறி உள்ளமொன்றிக், 2. பூவியல் புரிகுழல் வரிசிலை. 2. அப்பர் நல்லான்காண் நான்மறைக. 3. சுந்தரர் ஊனங் கைத்துயிர்ப் பாயுல.

தலவரலாறு: கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக்கோவில்களில் இத்தலத்து ஆலயமும் ஒன்றாகும்.வலியன் என்ற கரிக்குருவி இத்தலத்தை வலம் வந்து பூஜை செய்ததால் திருவலிவலம் என்ற பெயர் ஏற்பட்டது.

முன்னொரு காலத்தில் ஒருவன், முன் வினைப்பயனால் சில பாவங்கள் செய்தான். இதனால் அவன் அடுத்த பிறவியில் கரிக்குருவியாக பிறக்க நேரிட்டது. மிகச்சிறியதான குருவி ஒரு மரத்தில் தஞ்சம் அடைந்தது. அந்த மரத்தின் கீழ் முதிய சிவயோகி ஒருவர் அடியார்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தார். அந்த உபதேசங்களை தற்செயலாக கரிக்குருவியும் கேட்டது.

"சிவத்தலங்களில் சிறந்தது மதுரை. தீர்த்தங் களில் சிறந்தது அங்கிருக்கும் பொற்றாமரை. மூர்த்திகளில் சிறந்தவர் மதுரை சொக்கநாதர். மதுரைக்கு சமமான தலம் உலகில் வேறொன்றும்




இல்லை. சோமசுந்தரக்கடவுள் தன்னை வழிபடுபவர்களுக்கு, அவர்கள் வேண்டும் வரங்களை அள்ளித்தருபவர்," என்று யோகி சொல்லிக்கொடுத்ததை கரிக்குருவி கேட்டது.

ஞானம் பெற்றது. பின்னர் தனது முன்பிறப்பையும், தான் ஏன் கரிக்குருவியாக பிறந்தோம் என்பதை அறிந்து மதுரையை நோக்கி பறந்தது.

மதுரையை அடைந்த குருவி சோமசுந்தரர் கோயிலை வலம் வந்து பொற்றாமரைக்குளத்தில் மூழ்கியது. சிவனை உருகி வழிபட்டது. குருவியின் பூஜைக்கு இறைவன் மகிழ்ந்தார். குருவியை அழைத்து அதற்கு "மிருத்தியுஞ்சய' மந்திரத்தை உபதேசித்தார். கரிக்குருவியின் சிற்றறிவு நீங்கி பேரறிவு பெற்றது. வரம்பெற்ற கரிக்குருவி "வலியான்' என்னும் பெயரையும் பெற்றது. இக்குருவியின் மரபில் தோன்றிய ஒரு குருவி இத்தலம் வந்து மனத்துணை நாதரை வழிபட்டு முக்தி அடைந்தது. இதனால் இத்தலத்திற்கு வலிவலம் என்ற பெயர் ஏற்பட்டது.

ஒரு முகப்பு வாயில் நம்மை வரவேற்கிறது. முகப்பு வாயிலின் மேற்புறத்தில் சுதையினாலான ரிஷப வாகனத்தில்மேல் அமர்ந்துள்ளசிவன் பார்வதி, வள்ளி தெய்வானையுடன் மயில் மீதமர்ந்த முருகர், மூஞ்சூறு வாகனத்தில் விநாயகர் ஆகியோரைக் காணலாம். உள்ளே நுழைந்தால் தூண்களுடன் கூடிய முன் மண்டபம் உள்ளது.

மண்டபத்தில் கொடிமரம்,பலிபீடம் மற்றும் நந்தி மண்டபம் உள்ளது. அதன் பின் உள்ள 3 நிலை கோபு ரத்தைக் கடந்து உள்ளே சென்றால் நேரே மூலவர் மனத்துணைநாதர் சந்நிதியுள்ள கட்டுமலை அமைந்துள்ளது. படிகளேறி மண்டபத்தை அடைந்தால் வலதுபுறம் தெற்கு நோக்கிய அம்பாள் மாழையொண் கண்ணி சந்நிதி அமைந்துள்ளது.மூலவர் இருதய கமலநாதர் சுயம்பு மூர்த்தியாக கிழக்கு நோக்கி எருந் தருளியுள்ளார். பிராகாரத்தில் வலம் புரி விநாயகர், சுப்பிரமணியர், இலக்குமி, காசிவிசுவநாதர், நவக்கிரகங்கள் ஆகிய சந்நிதிகள் உள்ளன. ஆலயத்தைச் சுற்றி 4 புறமும் அக்காலத்தில் அகழி இருந்தது என்பது இத்தலத்து தேவாரப் பதிகங்களில் "பொழில் சூழ்ந்த வலிவலம்" என்று குறிப்பிட்டிருப்பதின் மூலம் அறியலாம்.



சிவத்திரு.குமரேசன்

இத்தலத்திற்கு ஏகசக்கரபுரம் என்றும் ஒரு பெயர் உண்டு. இவ்வாலயத்தில் உள்ள திருமால் ஏகசக்கர நாராயணப்பெருமாள் என்ற பெயருடன் காட்சி தருகிறார். சூரியனும், காரணரிஷியும் இத்தல இறைவனை பூசித்துப் பேறுபெற்றுள்ளனர். இத்தல தீர்த்தம் காரண ரிஷியின் பேரால் காரண கங்கை என்றுரயைக்கப்படுகிறது. இத்தலத்து முருகப்பெருமானை அருணகிரிநாதர் தனது திருப்புகழில் பாடியுள்ளார். திருப்புகழில் இத்தலத்து முருகன் மீது ஒரு பாடல் உள்ளது. சிவன் சந்நிதிக்கு இடப்பக்கம் முருகப்பெருமான் ஒரு திருமுகத்துடனும் நான்கு திருக்கரங்களுடனும் தனது தேவியர் இருவரு டன் நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கி எழுந் தருளியுள்ளார்.

தேவாரப்பாடல் பாடும் ஓதுவார்கள், தேவாரப்பாடல் பாடும் முன் இத்திருப்பாடலுடன் தான் தேவாரம் பாட ஆரம்பிப்பார்கள். தேவாரம் ஓதுவோர் யாவரும் முதன்முதலாக ஓதும் என்ற திருப்பாட்டு திருஞானசம்பந்தரால் முதல் திருமுறையில் இத்தலத்து இறைவன் மேல் பாடப்பெற்ற பூ இயல் புரிகுழல் வரிசிலை நிகர் நுதல் என்ற பதிகத்தின் 5வது பாடலாகும்.

எந்த ஒரு நிகழ்ச்சியையும் ஆரம்பிக்கும் முனபு விநாயகருக்கு வந்தனம் சொல்லிவிட்டுத் தான் ஆரம்பிப்பது நமது மரபு. அதன்படி கணபதி வர அருளினான் என்று இப்பாடலில் வரும் கணபதியை தொழுதுவிட்டு தேவாரம் பாட ஆரம்பிப்பார்கள். சுந்தரர் தனது பதிகத்தில் 5வது திருப்பாட்டில், சிறந்த இசைத்தமிழைப் பாடிய திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளும், திருநாவுக்கரசு சுவாமிகளும் அருளிச்செய்த பாடல்களைப் பெற்ற இறைவன் வலிவலத்தில் உள்ளான் என்று அவர்கள் இருவரையும் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

– சிவத்திரு.குமரேசன்
இராஜசிம்மன்
உதவிப் பேராசிரியர் SRM கலை
மற்றும் அறிவியல் கல்லூரி
919003296221 easanaithedi.in







பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள



**கீதாசமையல்**

(geetha samayal)

youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

LIKE & SHARE

# ஆன்மீக வழியில் அமைதி

நமது உடலுக்கு ஐந்து விதமான உறைகள் போன்று பஞ்ச கோசங்கள் அமைந்துள்ளன. பிராணனும், பலமும் அடங்கி இருப்பது பிராணமய கோசம் ஆகும். அந்த பிராணமய பலத்தினால் தோன்றுவது மனோன்மய கோசம் ஆகும். விஞ்ஞானம் மூலம் மனதில் தோன்றுவதுதான் விஞ்ஞானமய கோசம் ஆகும். அந்த விஞ்ஞானத்தினால் தோன்றியிருப்பதுதான் ஆனந்தமய கோசம் ஆகும். அன்னமய கோசம் என்பது அன்னத்தின் (உணவின்) காரணமாக ஏற்படுவது அன்னமய கோசம் ஆகும்.

பஞ்ச கோசம் என்பது மனிதனிடம் உள்ள ஐந்து உடல்களா? இன்று யோகம் கற்பிக்கும் பலரும் பஞ்ச கோசம் என்பது மனிதனை சுற்றி உள்ள நுண்மையான ஐந்து உடல்கள் என்று பலவாறு கூறி வருகிறார்கள். கோசம் என்பதற்கு உடல் என்பது பொருள் இல்லை. கோசம் என்றால் உடலுக்கு உறை போன்று என்று பொருள் கூறிவருவது ஓரளவு சரியானது ஆகும். கோசம் என்றால் பொக்கிஷம் அல்லது புதையல் என்று பொருள். மனிதனில் இருக்கும் பிராணசக்தி புதைந்து கிடக்கும் இடம்தான் ஐந்து உடல்கள் அடங்கியது என்பது பஞ்சகோசங்கள் ஆகும். பஞ்சகோசங்களைப் பற்றி அறிய வேண்டுமானால் ஆன்மீக வழியில் சென்று அறிந்து கொள்ளலாம்.

மனிதனது தேவைக்கு மிகுதியாக உள்ள பிராணன் உடலில் சேர்ந்தால் அது அன்னமய கோசம். அது பிராணனில் சேர்ந்தால் பிராணமய கோசம், புத்தியில் சேர்ந்தால் விஞ்ஞானமய கோசம், மனதில் சேர்ந்தால் மனோமயகோசம், ஆத்மாவில் சேர்ந்தால் ஆனந்தமய கோசம். இது ஒருமனிதன் எவ்வளவு பிராணனை, எங்கு சேர்க்கிறான் என்பதை ஆன்மீக வழியில் பயிற்சி சாதனைகள் மூலம்தான் அறியமுடியும். இது சாதாரண மனிதனுக்கு இயற்கை நிர்ணயித்தவாறும், ஆன்ம மன பரிணாமங்களுக்கு ஏற்றவாறு அவனது கோச நிலை இருக்கும். மனிதன் கோசநிலையை யோக, தந்திர ஆன்மீக சாதனைகள் மூலம் அதிகரித்துக்கொள்ள முடியும் என்று ஞானிகள் கூறுகின்றனர்.

41

ஐந்து கோசங்களும் ஒன்றிலிருந்து ஒன்றும் மற்றும் ஒன்றை ஒன்று சார்ந்தும் இருக்கிறது. ஐந்து கோசங்களைப் பற்றி எளிதாகக் கூறவேண்டுமானால் நமது உடலை மூச்சு இயக்குகிறது. நமது உடல் இயங்குவதற்கு காற்று அல்லது மூச்சு அவசியம் தேவைபடுகிறது. அந்த மூச்சை உணர்வுஉடல் இயக்குகிறது. நமக்குள்ளே நாசியின் வழியே காற்று உள்ளே வெளியே செல்வதை கவனித்துப்



பார்த்தால் நன்கு உணர்வதற்கு முடியும். உணர்வுஉடலை நமது அறிவு உடல் இயக்குகிறது. உணர்வு நிலையை அல்லது உணர்வு உடலை நாம் உணர வேண்டும் என்றால் ஆன்மீக வழியில் பயிற்சி மற்றும் அறிவு இருந்தால்தான் உணர முடியும்.

இதனை ஆறு அறிவு படைத்த மனிதர்கள் மட்டும்தான் உணர முடியும். மிருகங்கள் பறவைகள் போன்ற மற்ற உயிரினங்களால் உணர்வுகளை உணர முடியாது. காரணம் அவைகளுக்கு ஆறாவது அறிவு என்பது கிடையாது. எடுத்துக்காட்டாக ஒரு பசுவிடம் சென்று உனக்கு மூச்சுக்காற்று இருப்பதால்தான் நீ புல்லைத் தின்ன முடிகிறது. உன்னால் நடந்து செல்ல முடிகிறது. உனக்கு மூச்சுக் காற்று இல்லை என்றால் உன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று கூறிப்பாருங்கள். அதற்கு காது கேட்டாலும் அதனால் உணர்ந்து கொள்ள முடியாது. ஏனென்றால் மனிதர்களைப்போன்று புரிந்து கொள்ளக்கூடிய அறிவு அதனிடம் இல்லை.

அறிவு உடலை அதற்கு மேல் உள்ள இன்ப உடல் இயக்குகிறது. இன்ப உடலை அதற்கு மேல் உள்ள மறுமை இன்ப உடல் இயக்குகிறது. மறுமை இன்ப உடலை அதற்கு மேலிருக்கின்ற பேரின்ப உடல் இயக்குகிறது. அந்த பேரின்ப உடல் எல்லா உடலையும் இயக்குகின்ற திருவருள் ஆகும். எல்லா உயிர்களையும் இயக்கும் அருள் நிலை அன்பு நிலையாகும். ஆண் பெண் இருவரின் இனம் புரியாத இன்ப உறவுகளினால் கருவில் சிசு உருவாகி, இவ்வுலகில் குழந்தையாக பிறக்கிறது. அக்குழந்தைக்கு பால், அன்னம் கொடுத்து ஸ்தூல உடல் வளர்ச்சி பெறுகிறது. அக்குழந்தை உண்ணும் உணவுக்கு தகுந்தவாறு உடல் அமைப்பைப் பெறுகிறது. அதுவே அன்னமய கோசம் எனப்படுகிறது.

பிராணமய கோசம் என்பது காற்றுடம்பு ஆகும். இதற்கு உருவம் கிடையாது. அது உடலில் எல்லா இடத்திலும் காற்றாக மூச்சாக இருந்து இயக்குகிறது. இந்த அன்னமய கோசத்திலிருந்து பிராணமய கோசமாகி பரமாத்மாவின் உள்ள சத், சித் ஆனந்தம் ஆகிறான். நாம் நாள்தோறும் மற்றவர்களிடம் அடிக்கடி பேசக்கூடிய 'நான்' என்பது நமது உடலையும் குறிக்கும். நம் கண்ணுக்குத்தெரியாத


• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

உணரக்கூடியதுமான ஆன்மாவையும் குறிக்கும். இந்த 'நான்' என்ற சொல்லை குறித்து இரண்டு வகைகளாக இருக்கிறது என்பது பற்றி திருமூலர் பல இடங்களில் குறிப்பிடுகிறார்.

ஒருவகை 'நான்' என்ற சொல் பசி, சாமர்த்தியம், வீரம், தீரம் போன்றவைகளாக செயல்படுகிறது. மற்றுமொரு 'நான்' என்ற சொல் என்பது வாயாடி, ஊமை, குருடன் முடவன் போன்றவையாகவும் செயல்படுகிறது. எடுத்துக்காட்டாக ஒருவனிடம் "நீ ஏன் சோர்ந்துபோய் இருக்கிறாய்' என்று கேட்டால் நான் பசியுடன் இருக்கிறேன் அதனால் சோர்ந்து இருக்கிறேன் என்று கூறுவதாக வைத்துக் கொள்வோம். இந்த இடத்தில் 'நான்' என்ற சொல் பசியை முன்னிலைப்படுத்தி அவன் கூறுகிறான்.

இதைப்போன்று மற்றவைகளைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்த்தால் ஒவ்வொரு வகை 'நான்' என்ற சொல்லை அறியமுடியும். இவை பிராணமய கோசத்தின் குணமாகிறது. இந்த பிராணமய கோசம் நமது கண் காது போன்ற ஐம்பொறிகளுக்கு தேவையான பலத்தினைக் கொடுக்கிறது.

இந்த கோசம் நல்லவழிகளிலோ அல்லது தீமை தரக்கூடிய வழிகளிலோ மனிதனை நடத்திச் செல்கின்றது. இந்த உடல், மனம் சார்ந்த



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

பஞ்சேந்திரியங்களுடன் சேர்ந்து விருப்பு வெறுப்பு என்ற தத்துவ ஓசைகளை கேட்டும் மனோன்மய கோசமாகின்றது. பிராணமய கோசத்திற்கு வேறாக இருந்து கொண்டு செயல்படும்போது காமம், கோபம், 'நான்' 'எனது' என்பன போன்ற ஆணவ விகாரங்களை உடையதாக இருக்கிறது.

மனதிற்கும் பிராணனிற்கும் பெரிய நீண்ட தொடர்பு எதுவும் இல்லை. ஆனால் பிராணனை பற்றி நன்கு புரிந்துகொண்டு விட்டால் உணர்ந்து கொண்டால் நமது மனம் நன்றாக இருக்கும்.

நாம் மனக்குழப்பத்துடன் இருக்கும்போது ஓரிடத்தில் அமர்ந்து அமைதியாக தியானத்தினை மேற்கொண்டால் நமக்கு மனக்குழப்பம் நீங்கி ஓரளவு மனம் அமைதி அடைகிறது. தியானம் என்பது நாம் உள்ளே வெளியே விடும் மூச்சுக் காற்றைக் கவனித்தாலே போதுமானது என்று ஒரு சில ஞானிகள் கூறியுள்ளனர். இந்நிலை பெறுவதற்கு ஆன்மிகம் பல வழிகளில் துணை புரிகிறது.



**எழுத்தாளர்பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!
www.aanmeegamalar.com

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

சேவை நோக்கோடு வெளிவரும் நமது இதழுக்கு வாசகர்களின் ஆதரவு தேவை... அறியாத ஆன்மிகத் தகவல்கள் பலவற்றை மிகுந்த சிரமங்களுக்கிடையே தொகுத்து, அனைவருக்கும் புரியும்படி தெளிவாகவும், அழகிய வண்ணமயமாகவும் வெளியிட்டு வருகிறோம். நமது இதழுக்கு பொருளாதார ரீதியில் உதவி செய்ய விரும்பும் வாசகர்கள் கீழ்காணும் வழிமுறைகளில் உதவலாம். எங்கள் சேவைக்கு உங்கள் உதவி தேவை.

## விருப்ப சந்தா

சந்தா அனுப்புபவர்கள், கீழ்காணும் ஸ்கேனர் மற்றும் வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay

SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**